JANASAKTHI போன்: 84097 4 பக்கம் ஒரு அணு மலர் 8 இதழ் 269 இலங்கை 10 சதம் REGD. NO. M. 5934

ஜனசக்தி

சென்னை	நந்தன, ஆவணி 30உ	ஞாயிற்றுக்கிழமை	1952, செப். 14
வெளியூர்	நந்தன, ஆவணி 31உ	திங்கட்கிழமை	1952, செப். 15

நம்பூத்ரிபாத், ராமமூர்த்திக்கு பாஸ்போர்ட் மறுப்பு

சென்னை, செப். 14—

இம்மாத இறுதியில் பீகிங்கில் நடைபெறும் சமாதான மகாநாட்டிற்குப் பிரதிநிதிகளாகச் செல்லும் தோழர்கள் பி. ராமமூர்த்தி, இ. எம். எஸ். நம்பூத்ரிபாத், விட்டோ கோஷ், பரமேஸ்வரன், திரு. எஸ். பி. ஆதித்தன் முதலியோருக்கு பாஸ்போர்ட் அளிக்க இந்திய சர்க்கார் மறுத்துவிட்டனர்.

பாஸ்போர்ட் கொடுக்க சென்னை சர்க்கார் சம்மதிக்காததால், இந்திய சர்க்கார் மறுக்க நேர்ந்ததாம்.

சீனுவில் தேவையைவிட அதிக தானிய உற்பத்தி

3 ஆண்டுகளில் மகத்தான சாதனை

சீனப் பொருளாதார புனரமைப்பு வெற்றிபெற்றது

விரிவான தொழில்மயமாக்க உறுதியான அஸ்திவாரம்

பீகிங், செப் 14—

"சீனப் பொருளாதாரத்தைச் சீர்படுத்தி மாற்றியமைக்கும் பிரம்மாண்டமான பணி வெற்றிகரமாக முடிவடைந்தது. விவசாய நாடாக இருந்த சீன தேசத்தை, தொழிற் துறையில் மிகவும் முன்னேறிய நாடாக உருமாற்ற உறுதியான அஸ்திவாரமிடும் பணியும் பரிபூரணமாயிற்று" என்று நவசீன செய்தி ஸ்தாபனம் அறிவிக்கிறது.

அக்டோபர் முதல் தேதியுடன் சீனமக்கள் குடியரசு ஸ்தாபிக்கப்பட்டு மூன்றுவருடங்கள் ஆகின்றன. இம்மூன்று வருடங்களில் மக்கள் சீன பொருளாதாரத் துறையில் சாதித்த மகோன்னதமான, நம்புவதற்கரிய சாதனைகளை நவசீன செய்தி ஸ்தாபனம் குறிப்பிட்டுள்ளது.

அவையாவன:

1. உலகிலேயே மிகவும் அதிக ஜனத்தொகை கொண்டுள்ள சீன தேசம், தனக்கு தேவையான உணவுப் பொருள்கள் அனைத்தையும் தானே உற்பத்தி செய்து கொள்வது மட்டுமின்றி, இதர நாடுகளுக்கும் ஏற்றுமதி செய்கிறது.

2. இறக்குமதி செய்யப்படும் பருத்தியின் மீதே இதற்கு முன்னர் சீனப் பஞ்சாலைகள் அதிகமாக ஆதாரப்பட்டிருந்தன. இப்பொழுது சீன பஞ்சாலைகளுக்குப் போதிய பருத்தி சீனுவிலேயே விளைகிறது.

3. யுத்த முற்கால உற்பத்தி அளவுகளைக் காட்டிலும் அதிகமாக இன்றைய விவசாய, தொழிலுற்பத்தி பெருகி வளர்ந்துள்ளது.

4. சோவியத் யூனியன், கிழக்கு ஐரோப்பிய மக்கள் ஜனநாயக நாடுகளுடன் சீன அயல்நாட்டு வியாபாரம் செழித்தோங்கி, வளர்ந்துள்ளது. மக்கள் சீனுவின் மொத்த அயல்நாட்டு வியாபாரத்தில் இது 70 சத விகிதமாகும்.

5. சீனுவிலுள்ள கன இயந்திரத் தொழில்களில் 80 சத விகிதம் சர்க்காருக்கு சொந்தம். உபயோகப் பொருளுற்பத்தித் தொழில்களில் 40 சத விகிதமும், கப்பல் போக்குவரவில் 60 சத விகிதமும், ரயில்வேக்கள் பூராவும் சர்க்கார் வசமுள்ளன.

6. சிறுபான்மையினர் வசிக்கும் ஒரு சில பிரதேசங்களைத் தவிர சீன பூராவிலும் இந்தக் குளிர் காலத்திற்கும் அடுத்த வசந்த காலத்திற்குமிடையே நிலச் சீர்திருத்தம் அமுல் நடத்தப்பட்டுவிடும்.

கொடுக்கல்—வாங்கல் பாங்குத் தொழில் 90 சத விகிதம் சர்க்கார் பாங்கு வசமிருக்கிறது. ஏற்றுமதி இறக்குமதி வியாபாரத்தில் மிகப் பெரிய பகுதியும், மக்களுக்கு அத்தியாவசியமான பொருள்களான உணவுப் பொருள், துணிமணி, நிலக்கரி முதலிய உள்நாட்டு வியாபாரத்தில் 40 முதல் 100 சத விகிதம் சர்க்கார் வசமிருக்கிறது.

ஆனால் இதேசமயத்தில் அரசாங்க வழிகாட்டுதலின் கீழ் தனிப்பட்ட வியாபாரமும் பெருகி வளர்ந்துள்ளது. கடந்த மூன்று வருடங்களில் தனிப்பட்ட வியாபாரம் 70 சதவிகிதம் அதிகரித்துள்ளது.

சீன சர்க்காரின் சட்டதிட்டங்களுக்கு உட்பட்டு நடக்க சம்மதித்தால், அன்னிய மூலதன உதவி பெற்றுள்ள தொழிற்சாலைகளும் தொடர்ந்த பணியாற்ற அனுமதிக்கப்படும்.

சிகரெட்டுத் தொழிற்சாலைக்கு வேண்டிய புகையிலை பூராவும் சீனுவிலேயே இப்பொழுது பயிர் செய்யப்படுகிறது.

தொழிலாளர்களின் உற்பத்தி சக்தி முன்னைவிட இப்பொழுது மிக அதிகமாயுள்ளது. நிலக்கரி சுரங்கத் தொழிலாளரின் உற்பத்தி சக்தி இருமடங்காகியுள்ளது.

இலங்கைக்கு சீன அரிசி

ஹாங்காங், செப் 12—

சிலோன் உணவு இலாகா பார்லிமெண்டுக் காரியதரிசி திரு. வி. குமாரசாமி இன்று இங்கு வந்து சேர்ந்தவுடன் மக்கள் சீன, சிலோனுக்கு அரிசி விற்க ஒப்புக்கொண்டிருப்பதாக அறிவித்தார்.

6 பேர் கொண்ட சிலோன் வியாபார தூதுகோஷ்டி பீகிங் செல்ல விருக்கிறது. இந்தக் கோஷ்டியில் ஒருவர் தான திரு. வி. குமாரசாமி.

எல்லாவற்றிற்கும் சிலோன் மேற்கு நாடுகளை நம்பியிருக்காது கிழக்கு நாடுகளுடன் சிலோன் உறவுகளைபலப்படுத்திக்கொள்ள முயன்று வருவதாகவும்" அவர் கூறினார்.

சிலோன் சீனுவுக்கு ரப்பர் விற்கத் தயாராக இருப்பதாக சிங்கபூரில் திரு. குமாரசாமி அறிவித்தார்.

சோவியத் கவசப்படை தினம்

லண்டன், செப். 14—

சோவியத் கவசப் படை தினத்தை ஒட்டி சோவியத் டாங்கு, பீரங்கிப் படை வீரர்களைப் பாராட்டி சோவியத் யூனியன் யுத்த மந்திரி மார்ஷல் வாஸிலெவ்ஸ்கி பிரகடனம் விடுத்துள்ளார்.

சோவியத் யூனியன் பூராவும் இத்தினம் நாளைகுக் கொண்டாடப்படும்.

மெக்சிகோவின் புதிய ஜனதிபதி

மெக்சிகோ ஸிடி, செப் 14—

"புரட்சிகர ஸ்தாபனங்கள்" என்ற கட்சியின் அபேட்சகரான அடோல்பே ரூயிஸ் கார்ட்டைன்ஸ் ஜனதிபதியாகத் தேர்ந்தெடுக்கப்பட்டார்.

ஜூலை 6ம் தேதியன்று நடைபெற்ற தேர்தலில் 27, 13, 419 ஓட்டுகள் ஆதாவது 75 சதவிகிதம் பெற்ற இவர் டிசம்பர் முதல் தேதி பதவியேற்பார்.

உலகப் பிரச்னைகளை தீர்க்க 5 வல்லரசுகள் கூடவேண்டும்

அ. இ. கா. க.வில் தீர்மானம் நிறைவேறியது

சந்திரசேகர நகர், செப். 14—

"உலகத்தின் பெரிய வல்லரசுகள் ஒன்று கூடி, மனித சமூகத்தை அமுக்கி வரும் பயத்தைப் போக்கி, இன்று அனைவரையும் எதிர்நோக்கியுள்ள பிரதான பிரச்னைகளைத் தீர்க்க சில உடனடியான நடவடிக்கைகளை எடுத்துக் கொள்ள வேண்டும்." என்ற, வெளிநாட்டுக் கொள்கை பற்றிய காங்கிரஸ் காரியக் கமிட்டியின் தீர்மானத்தை, இன்று காலை கூடிய அ. இ. கா. க. 2½ மணி நேர விவாதத்திற்குப் பின் ஏகமனதாக ஏற்றுக் கொண்டது.

மௌலானா அபுல்கலாம் ஆஜாத் தீர்மானத்தை பிரேரணை செய்து, உலகத்தின் வானத்தில் 3-வது உலக யுத்த மேகங்கள் தோன்றியுள்ள இன்று மனித சமுதாயத்தின் நல உரிமைகளுக்கும் சரி, ஒவ்வொரு தனிப்பட்ட நாட்டின் நலவுரிமைகளுக்கும் சரி, யுத்தத்தைத் தவிர்க்க வேண்டியது அத்தியாவசியமாகும்" என்றார்.

அவர் மேலும் பேசுகையில், "பல்வேறு நாடுகளுக்கிடையிலுள்ள தகராறுகளைத் தீர்த்துக் கொள்வதற்கு யுத்தம் ஒரு பரிகாரமாகாது. வெற்றியடைந்தவர்களுக்கும், தோல்வியடைந்தவர்களுக்கும் யுத்தத்தால் துன்ப துயரங்களே ஏற்படும். உலகத்தின் அழிவில் அது கொண்டு போய் முடியும்.

"சிலர் கூறுவதைப் போல் இந்தியா ஏதாவதொரு வல்லரசு கோஷ்டியில் சேர்ந்து கொள்ளும், குறுகிய சுய நலத்தை அடிப்படையாகக் கொண்ட கொள்கையானது, மிகவும் கேடுகெட்ட சுயநலமாகும்.

"துரதிர்ஷ்ட வசமாக ஐ.நா. சபை இரு வல்லரசு கோஷ்டிகளின் ஆதிக்கப் போட்டி மைதானமாக மாறிவிட்டது. எந்த கோஷ்டியுடனும் இந்தியா சேருவதானது தன்னுடைய கடந்த காலக் கோட்பாடுகளை விட்டு நழுவிச் செல்வதாகும்.

இந்த இரண்டு வல்லரசு கோஷ்டிகளிடையே கருத்து வேற்றுமை ஏற்படும்போது இந்தியா "கடுமையான நடுநிலைமைக் கொள்கையைக்" யாள வேண்டுமென்று சிலர் கூறுகின்றனர். ஆனால் அவ்வாறு செய்வது இந்தியா கடைப்பிடித்து வரும் ஆத்மீகக் கொள்கைகளுக்கு விரோதமாகும்.

"நடுநிலைமை" வகிப்பதென்பது, நாம் ஒரு சுதந்திர நாடு என்ற முறையில் நம் மீது சாரும் பொறுப்புகளை தட்டிக் கழிப்பதாகும். யதார்த்த நிலைமையைப் பார்க்காமல் கண்ணை மூடிக் கொள்வதாகும்.

இவ்வாறு செய்வதுஏதாவதொரு வல்லரசு கோஷ்டியைக் கண்டு பயப்படுவதற்கு ஒப்பாகும்.

ஆகவே இந்தியா இந்த இரு கொள்கைகளையும் பின் பற்றாது, இந்தியா ஒரு நடுநிலைமை நாடு என்று சில நாடுகளில் இருந்து வரும் கருத்து உண்மைக்குப் புறம்பானது.

"இந்தியா நடுநிலைமை நாடல்ல. நடுநிலையாக இருக்கவும் முடியாது. ஒவ்வொரு பிரச்னையையும் இந்தியா சர்வதேசக் கண்ணோட்டத்திலும், அப்பிரச்னையின் யோக்யதாம்சத்தின் அடிப்படையிலும் தான் பரிசீலனை செய்யும். ஒவ்வொரு பிரச்னையிலும் சுயேச்சையான முடிவே எடுக்கும். சமாதானத்தை பலப்படுத்துகிறதா அல்லது யுத்தத்தை துரிதப்படுத்துகிறதா என்று பரிசீலனை செய்து முடிவெடுக்கும்.

இவைகள்தான் இந்திய வெளிநாட்டுக் கொள்கையின் அடிப்படைகள். இத்தகைய ஒரு கொள்கை ஏதாவதொரு வல்லரசு கோஷ்டிக்கு வருத்தத்தை உண்டாக்குமா என்பதுபற்றி இந்தியா கவலைப்படாது. எந்தப் பிரச்னையிலும் நியாயத்தின் பக்கமே இந்தியா நிற்கும்" என்றார்.

"சீனுவை ஐ. நாடுகள் அங்கீகரிக்க வேண்டுமென்று இந்தியா வற்புறுத்தி வருகிறது. ஏனெனில் அது ஒன்றுதான் நியாயத்தின் பால்பட்ட வழியாகும். அதையாராவது ஏற்றுக்கொள்கிறார்களா, இல்லையா, என்பதல்ல பிரச்னை, உண்மையான யதார்த்தைத் தான் நாம் பார்க்க வேண்டும். புது சீன சர்க்கார் அங்கீகரிக்கப்பட வேண்டுமென்பதில் எவ்வித ஆட்சேபனையும் இருக்க முடியாது.

இவ்விஷயத்தில் இந்தியாவின் கொள்கையை சில வல்லரசுகள் ஏற்றுக்கொள்ளவில்லை. ஐ. நா. வும், இதை ஏற்றுக்கொள்ளவில்லை ஆகவே கடந்த 3 வருடங்களாக இப்பிரச்னை தீர்க்கப்படாமல் இருக்கிறது. புதிய சீனுவை அங்கீகரிக்காததால் ஐ. நா. ஒரு மலையளவு தவறைச் செய்துள்ளது. சீன

(2-ம் பக்கம் பார்க்க)

யுத்தத்தை தவிர்ப்பதே இந்தியாவின் திடமான கொள்கை

நாட்டில் பொருளாதார முன்னேற்றம் ஏற்பட வேண்டும்

அ. இ. கா. கமிட்டியில் நேருவின் உரை

சந்திரசேகர நகர், செப். 13—

பண்டிட் நேருவின் தலைமையில் அகில இந்தியக் காங்கிரஸ் கமிட்டிக் கூட்டம் இன்று 2-30 மணிக்கு இந்தூர்-சந்திரசேகர ஆஜாத் நகரில் கூடியது.

தன்னுடைய ஒரு மணி நேரப் பிரசங்கத்தில் பண்டிட் நேரு, காங்கிரஸ்காரர்களிடையே வகுப்பு உணர்ச்சிகளோ, [illegible]மாகாண உணர்ச்சிகளோ [illegible]க் கூடாதென்று [illegible]ச்சரித்தார்.

[illegible] க. மெம்பர்களில் [illegible]000 பார்வையாளர் [illegible]

[illegible] கமிட்டிக்கும், அ. இ. [illegible]ட்டிக்கும் மட்டுமல்ல. [illegible]டின கொள்கையைப் [illegible]றி ஒவ்வொரு சாதாரணப் [illegible]ரஜைக்கும் சரியான விரிந்த கண்ணோட்டம் ஏற்பட வேண்டியது அவசியமாகும்.

புத்திநுட்பமுள்ள வாக்காளர்கள், புத்திநுட்டமுள்ள மக்கள் இவைகளையெல்லாம் விவாதித்து முடிவுகளெடுக்க வேண்டுமென்று நாம் விரும்புகிறோம்.

"அயல் நாட்டுக் கொள்கை, [illegible] ஆப்ரிக்கா பற்றிய தீர்ம[illegible]ளை, கமிட்டி, முதல் வா[illegible]ல் வைத்திருந்தாலு[illegible], பொருளாதார நி[illegible]ந்தான் நமக்கு மிக[illegible]முக்யமானது. பொருளா[illegible]த் துறையில் முன்னே[illegible]றம் ஏற்படுத்துவது தான் நாட்டின் முன்னுள்ள முக்ய பிரச்னை. இந்தப் பிரச்னையை நாம் திருப்திகரமான முறையில், சரியாக பரிகாரம் செய்யாவிட்டால் நமக்குத் தோல்விதான. மக்களின் வாழ்க்கை தரத்தை எப்படி உயர்த்துவது. வறுமை என்ற [illegible]டைமையும், வேலையில்லாத் [illegible]டா[illegible]த்தையும், அத[illegible] மனச்சோர்வை [illegible]ாக்குவது என [illegible] முன்னுள்ள

[illegible] பிரச்னைகளை யெல் [illegible]தான, விடாப்பிடி[illegible]ழைப்பினால் தான [illegible] முடியும். இன்றையப் [illegible]களைப் பற்றி சிந்திக் [illegible]பாது, நாளைய தினம் [illegible] போவதைப் பற்றியும், [illegible]காலத்தைப் பற்றியும், [illegible]றந்[illegible] விடக்[illegible]டாது"

சாதகமாக உபயோகப்படுத்திக்கொள்ளாமல் தடுக்க வேண்டுமென்றார்.

பிறகு நேரு. "நாம் அடைந்துள்ள சுதந்திரத்தை ஸ்திரப்படுத்தி. கெட்டிபபடுத்தி நாட்டு மக்களை சக்தி வாய்ந்தவர்களாகவும், சுபீட்சம் பெற்றவர்களாகவும்மாற்ற வேண்டுமென்றார்,

இதர கட்சிகள் மீது வசைமாரி

காங்கிரசை எதிர்க்கும் இதர கட்சிகளைப்பற்றியும், குரூப்புகளைப்பற்றி குறிப்பிடுகையில், "காங்கிரஸைபோல், வேறெந்தக் கட்சிக்காவது நாட்டின் சுதந்திரத்தையும், ஐக்கியத்தையும் இணைத்து ஒன்றாக்கும் திறமையில்லை" என்றார். "நாம்தான், பல்வேறு பிளவு சக்திகள் சீர்குலைவு வேலைகள் செய்யாமல் தடுத்து வருகிறோம்" என்றார்.

"காங்கிரஸ் ஒன்று பட்ட ஸ்தாபனமாக நின்றாலல்லாது நாட்டின் பொருளாதார முன்னேற்றம் விரைவாக நடைபெறாது" என்றார்.

"ஜனநாயகம் தவறாகவும் செல்லலாம்"!

காங்கிரஸின் சட்ட திட்டங்கள் சம்பந்தமான திருத்தங்களைப் பற்றி பண்டிட் நேரு பேசுகையில், "மக்களுடன சதா தொடர்பு வைத்துக் கொண்டிருக்க வேண்டிய பொறுப்பு காங்கிரசுக்கு இருக்கிறது. அவர்களுக்குத் தலைமை வகித்து வழிகாட்ட வேண்டும். சில சமயங்களில் அவர்கள் காட்டும் வழியையும் நாம் பின்பற்றவேண்டும். காங்கிரஸ் ஒரு ஜனநாயக ஸ்தாபனம். அதே சமயத்தில் மெஜாரிட்டியினால் குருட்டுத்தனமான முடிவுகளெடுப்பது ஜனநாயகமல்ல. ஒரு ஜனநாயக ஆட்சியில் பெருவாரியான மக்களின் கருத்துப்படி தான் காரியங்கள் நடைபெற வேண்டுமென்பதை நான் ஒத்துக்கொள்கிறேன். ஆனால் அதே சமயத்தில் ஜனநாயகம் சில சந்தர்ப்பங்களில் தவறான, முட்டாள்தனமான முடிவுகளையும் எடுக்கலாம். இன்று உலகத்தைப் பார்த்தால், ஜனநாயக நாடுகள் தவறான முடிவுகளெடுப்பதை நாம் பார்க்கிறோம். ஒரு ஜனநாயக ஆட்சி சரியாக நடைபெற வேண்டு மென்றால், மேலிருந்து சரியான வழிகாட்டுதல் கொடுக்க வேண்டும் என்பது மாத்திரமல்ல மக்களிடமிருந்தும் சரியான

(2-ம் பக்கம் பார்க்க)

சோவியத், மஞ்சூரிய எல்லையில் 2வது தடவை தாக்குதல்

சீனுவைப்போருக்கிழுக்க அமெரிக்க முயற்சி

டோக்கியோ, செப். 14—

சோவியத் யூனியன், மஞ்சூரிய எல்லைக்கருகில் இன்று இரண்டாவது முறையாக அமெரிக்க கொலைக்காரர்கள் குண்டுவீசி சர்வநாசம் செய்தனர். சைபீரிய எல்லையிலிருந்து 8 மைல் தூரமுள்ள முன்சான் நகாமும், ஹியேர்யோன் பிரதேலமும் படு தாக்குதல்களுக்கு இலக்குகள் ஆயின.

(முன்வந்த செய்தி)

டோக்கியோ, செப். 13—

மஞ்சூரிய எல்லையில், யாலு நதிக் கரையிலுள்ள சுய்ஹோ மின்சார நிலையங்கள் மீது அமெரிக்க கோட்டை விமானங்கள் மீண்டும் 300 டன் வெடிகுண்டுகளை வீசி சர்வ நாசம் புரிந்தன.

கொரியாப் போரை சீனுக்கும் விஸ்தரிக்க வேண்டுமென அமெரிக்க கொலைவெறியர்கள் மீண்டும் விடாது முயற்சிக்கிறார்கள். சீனத் தொழிற்சாலைகளுக்கு மின்சாரம் சப்ளை செய்யும் யாலு நதி மின்சார நிலையங்களை அழித்து, சீனுவை அணு வெறியர்கள் ஆத்திரமூட்ட முயற்சிக்கிறார்கள்.

யாலு நதிக்கரையில் கடந்த ஜூன் மாதத்தில் அமெரிக்கர்கள் நடத்திய பெரும் விமானத் தாக்குதலுக்[illegible] பின்னர், [illegible]த்தப்ப[illegible] மாண்ட[illegible] தான், [illegible]

ஜூன் [illegible] கர்களால் [illegible] சார [illegible] புதுப்[illegible] எனவே[illegible] தகர்க்[illegible] கடியில் [illegible] பின்னா[illegible] கர குண்டுகள[illegible] பட்டனவாம்.

அமெரிக்கத் த[illegible] அலை அலையாக மூன்று மணி நேரம் நீடித்தது.

(கடந்த ஜூன் மாதத்தில் அமெரிக்க போர் வெறியர்கள் யாலுநதி மீது நடத்திய குண்டு வீச்சை எதிர்த்து உலகெங்கும் கண்டனக் குரல் எழுந்தது. பிரிட்டிஷ் பார்லிமெண்டிலும் இதைக் கண்டித்து காரசாரமான விவாதம் நடைபெற்றது. அமெரிக்க வெறிச்செயலை பண்டித நேருவும் இந்தியப் பார்லிமெண்டில் வன்மையாகக் கண்டித்தார்.

தாக்குதலுக்கு பிரிட்டிஷ் சம்மதம்

மஞ்சூரியா எல்லையில் அமெரிக்க விமானங்கள் நடத்திய [illegible]

[illegible] இந்திய[illegible]ன் போராட்டத்திற் [illegible] பாரத் ஆற்றி [illegible]வகை எடுத்துரைத்தார். மத்யபாரதத்தில் அ.இ.கா.க. கூட்டம் நடத்துவதின் மூலம், பிரிட்டிஷ் ஆட்சிக் கா[illegible]ல் புறக்கணிக்கப் பட்டு[illegible] மத்யபாரதத்தின் பிரச்னைக[illegible] அதிகமாகக் கவனிப்பதற்கு வழி செய்யும் என்று நம்புகிறேன் என்றார்.

நேருவின் பிரசங்கம்

பண்டித நேரு பேசுகையில் அ. இ. கா. கமிட்டியின் முன் விவாதத்திற்கு வைக்கப்பட்டுள்ள அயல்நாட்டுக் கொள்கைப் பற்றிய நகல் தீர்மானத்தின் முக்கி[illegible]த்துவத்தை வற்புறுத்தி[illegible] தொடர்ந்து [illegible]

ஜினீவா சம்பாஷணைகள் பயனற்றுப் போயின

அடிப்படைப் பிரச்னையிலேயே முட்டுக்கட்டை

புதுடில்லி, செப். 13—

காஷ்மீர் பற்றி ஜினிவாவில் நடைபெற்ற சம்பாஷணைகள் பயனற்றுப் போயின என்றும், அடிப்படைப் பிரச்னைகளிலேயே முட்டுக்கட்டை ஏற்பட்டிருப்பதாகவும், ஜினீவாவிலிருந்து புதுடில்லி வந்து சேர்ந்த பாதுகாப்பு மந்திரி கோபால்சாமி அய்யங்கார் கூறினார்.

காஷ்மீரில் யுத்த நிறுத்தக் கோட்டிற்கு இருபுறங்களிலிருந்தும் இந்தியாவும் பாகிஸ்தானும் வாபஸ் செய்ய வேண்டிய துருப்புகளின் எண்ணிக்கையைப் பற்றியும், காஷ்மீரில் பொதுஜன வாக்கெடுப்பு நிர்வாக அதிகாரியின் நியமன தேதி பற்றியும் கருத்தொற்றுமை ஏற்படவில்லை.

ஜினீவா சம்பாஷணைகள் தோற்றுப்போனது பற்றி தான் மிகவும் ஏமாற்றமடைந்திருப்பதாக டாக்டர் கிரஹாம் [illegible]

அயல்நாட்டு மந்திரி[illegible] ஜாபருல்லாகான் லண்டனி[illegible]னர். இவர் லண்டனி[illegible]னகு நாட்[illegible]

நட[illegible]

புது[illegible] இந்திய[illegible]

"அமெரிக்க சாமான்களை பகிஷ்கரியுங்கள்"

கொரிய யுத்த நிறுத்தத்திற்கு குமரப்பா யோசனை

ஜலந்தர், செப். 12—

ஜலந்தரில் நடக்கும் அகில இந்திய 3-வது சமாதான காங்கிரசில் டாக்டர் குமரப்பா திறப்பு விழாப் பிரசங்கம் செய்த பொழுது, "இன்று உலகசமாதானத்திற்கு ஆபத்தாயிருப்பது, ருஷ்யாவின் சமாதையான விநியோகக் கொள்கைக்கும், போட்டியிடும் அமெரிக்க பொருளாதாரக் கொள்கைக்கும் உள்ள முரண்பாடு தான" என்று கூறினார். செல்வத்தை சமதையாக பங்கிட வேண்டும், சகலருடைய தேவையையும் பூர்த்தி செய்ய வேண்டும் என்ற ருஷ்யமுறை காந்திய சர்வோதய முறையைப் போன்றது என்றும் அவர் கருதுவதாகக் கூறினார்.

[illegible] யுத்தம் நிறுத்தப் [illegible] அமெரிக்க சமான [illegible]ந்தியர்கள் வாங்கக் [illegible]டி [illegible] என்று அவர் [illegible]றினார்.

[illegible]சாப[illegible]களை வாங்[illegible]

"நாம் விரும்பும் சமாதானம், அமெரிக்கா கொரியாவில் உண்டுபண்ண விரும்புமயான சமாதானம் அல்ல. அன்பின் அடிப்படையில் ஒருவரை ஒருவர் புரிந்துகொள்வதினால் ஏற்படும் சமாதானம் தான நாம் விரும்புவது" என்றார்.

சமாதான இயக்கத்தை வெற்றிபெறும்படி செய்ய வேண்டுமென்றும், சீனுவுடன் இந்தியா நெருங்கிய தொடர்பு கொண்டு நிற்க வேண்டுமென்றும் அகில இந்திய சமாதான கவுன்சில் தலைவர் டாக்டர் கிச்சலு மக்களை அறைகூவினார்.

இந்திய-எதிர்ப்பு வாக்கியத்தை வாபஸ் வாங்கு!

அமெரிக்கக் கைக்கூலியின் உளறல்

கல்கத்தா மாணவர்கள் ஆங்காரம்

கல்கத்தா, செப். 12—

கல்கத்தா யூனிவர்ஸிடியில் ராமானந்த சாட்டர்ஜி ஞாபகார்த்த சொற்பொழிவின் 3-வது பிரசங்கத்தை இன்று மாலை நிகழ்த்திய அமெரிக்க கொலம்பியா யூனிவர்ஸிடி மேல்நாட்டு வரலாறு, சர்வதேச விவகார ஆசிரியரும், 47 வருடங்களுக்கு முன் இந்தியாவை விட்டுச்சென்ற மாஜி புரட்சிவாதியுமான டாக்டர் தாரகநாத் தாஸ் "உலக அரசியலில் இந்தியா" என்னும் விஷயம் பற்றிய பேசின இறுதியில், ஒரு மாணவர் கேள்வி ஒன்று கேட்டார்.

"இம்மாதிரி முறையற்ற தலையீடு" பற்றி வெகுண்ட டாக்டர் தாஸ், "நான் அமெரிக்க வாழ்விலும், அந்த நாட்டின் முறையான வாழ்விலும் கலந்து விட்டவன். இம்மாதிரி முறையற்ற தலையீடு இந்தியாவில்தான் காணப்படுகிறது" என்று ஒரு போடு போட்டார்.

அவ்வளவுதான் நாகமெனச் சீறியெழுந்தன மாணவர்களின் ஆட்சேபக் குரல்கள். 'இந்திய மக்கள் மீது வீசியெறியப்பட்ட அபாண்ட மொழிகளை வாபஸ்வாங்கு' என அங்கு கூடியிருந்த அத்தனை பேரும் ஆவேசக் குரலெழுப்பினர். பல மாணவர்கள் அவரைச் சூழ்ந்து கொண்டு, "அமெரிக்காவுக்கு திரும்பிப் போ! அமெரிக்க ஏஜண்டு இங்கு வேண்டாம்" என்று ஆர்ப்பரித்தனர்.

20 நிமிஷம் அவரால் வெளியேற முடியாமல் திணறித் திண்டாடும்படி நேர்ந்து விட்டது அவரது வாய்க் கொழுப்பால்.

அதோடு விட்டாரா அந்த அமெரிக்கபக்தசிரோன்மணி? இந்திய பத்திரிகையாளர் சங்கத்தில், இந்த சம்பவத்திற்குப் பின் பேசியபொழுது, இந்த சம்பவத்தைப் பற்றிக் குறிப்பிட்டு, "இந்த நாட்டில் சட்டம், அமைதியும் இருக்கிறது என்று சொல்லலாம். ஆனால் எங்கும் குழப்பம்தான் தென்படுகிறது. கல்வி பயிலும் சர்வகலா சங்கங்களில் கூட ஒரு விருந்தினனிடத்தில் முறையாக நடந்துகொள்ளப்படுவதில்லையே" என்று புலம்பினார்.

மேலும், "இம்மாதிரி குழப்பங்கள் உள்ளேயிருந்து ஏற்பாடு செய்யப் படுகிறதோ, வெளியேயிருந்து ஆதரிக்கப் படுகிறதோ நான் அறியேன்" என்று ஒருபோடு போட்டார்.

அதற்கு மேலும், "இந்த நாட்டில் வெளிநாட்டு ஆதிக்கம் வேலை செய்ய ஆரம்பித்து விட்டது. அதை எதிர்த்து போராடவில்லையென்றால், நாடு அவர்கள் பிடியில் போய்விடும்" என்றும் அங்கலாய்த்தார்.

"இந்தியா, அமெரிக்கா, ஜப்பான் பக்கம் இருக்கிறதா அல்லது சோவியத் யூனியன், சீனா பக்கம் இருக்கிறதா என நாடு முடிவு கட்டிக்கொள்ள வேண்டும். அமெரிக்கா - ருஷ்யா இடையே 3-வது உலக யுத்தம் நிகழுமாயின் நாம் இரண்டிலொன்றில் மாட்டிக் கொள்வோம். ஆதலால் தனித்து நிற்காமல் ஏதாவதொன்றில் சேர்ந்தாக வேண்டும்" என்றும் கூறியுள்ளார்.

தோட்டத் தொழிலாளர் சம்பளத்தை குறைக்கக்கூடாது

முதலாளிகளின் கோரிக்கைக்கு போர்டு தீர்ப்பு

கொழும்பு, செப். 13—

பெரும்பகுதி இந்தியர்களாக உள்ள ரப்பர் தோட்டத் தொழிலாளர்களின் அடிப்படை சம்பளத்தை குறைக்க வேண்டுமென்று முதலாளிகள் கோரியதை இலங்கை ரப்பர் சம்பள போர்டு இன்று நிராகரித்தது.

தொழிலின் இன்றைய மந்தநிலைமையில் முதலாளிகளின் சம்பளக் குறைப்பு கோரிக்கை அவசியமில்லை என்று போர்டு கூறியுள்ளது. செப்டம்பர் 16ல் கூடும் தேயிலை தோட்ட சம்பள போர்டும் இதே போன்று தேயிலைத் தோட்ட தொழிலாளர்களின் சம்பளத்தை குறைக்க வேண்டுமென்ற முதலாளிகளின் கோரிக்கையை பரிசீலனை செய்யும். தேயிலை தொழிலாளிகளிலும் பெரும் பகுதி இந்தியர்களேயாவர்.

கைத்தறிக்கு வேஷ்டி, சேலை உற்பத்தியை ஒதுக்க வேண்டும்

மத்திய சர்க்காருக்கு சென்னை நிதிமந்திரி வேண்டுகோள்

கோவை, செப். 13—

இன்று இங்கு நடைபெற்ற பொதுக்கூட்டங்களில் பேசுகையில் சென்னை நிதிமந்திரி திரு. சுப்ரமணியம் "சென்னை ராஜ்யத்தில் சுமார் 65,000 பேர்கள் பஞ்சாலைகளில் வேலை பார்க்கின்றனர். ஆனால் கைத்தறியை நம்பி 50 லக்ஷம் பேர் வாழ்கிறார்கள். சென்னை ராஜ்யத்தில் ஏராளமான கைத்தறி சரக்குகள் விற்பனையாகாமல் குவிந்து கிடக்கின்றன. தொழிலாளிகளுக்கும் சம்பளம் இடைப்பதில்லை."

"ராஜாஜி இப் பிரச்னையை நிரந்தரமாக தீர்ப்பதற்காக வேஷ்டி சேலைகளை மில்கள் உற்பத்தி செய்யக்கூடாது, அவைகளை உற்பத்தி செய்யும் பொறுப்பை பூரணமாக கைத்தறிக்கு அளிக்க வேண்டுமென்று கூறியுள்ளார். மில் சொந்தக்காரர்களும், மற்றவர்களும் எதிர்த்த போதிலும் கடைசியில் மத்திய சர்க்கார் இதை ஏற்றுக்கொள்ளும்" என்று தான் நம்புவதாகவும், கைத்தறியாளர்கள் கஷ்டப்பட்டுக்கொண்டிருக்கும் போது மில் முதலாளிகள் ஏகக் கொள்ளையடிப்பது சரியில்லை என்றும் கூறினார்.

காங்கிரஸார் நிதி சேகரிக்கும் நேர்மை!

ராமனாதபுரம், செப். 11—

இந்த ஊர் பஞ்சாயத்துப் போர்டு காங்கிரஸ் அதிகாரத்தில் உள்ளது. ஒரு மாமாங்கமாக ஒரே நபர்தான் தலைவர், காங்கிரஸ்காரர் காரியாலயத்திலுள்ள தலைமைக் குமாஸ்தா எழுதிவைத்த இடத்தில் சின்னக் கையெழுத்தா? பெரிய கையெழுத்தா? என்று கேட்டு போடக்கூடியவர். ஆகஸ்ட் மாதச் சம்பளம் செப்டம்பர் 9 தேதி வரை பட்டுவாடாவாகவில்லை. கைவசம் இருந்த பணத்தை எல்லாம் கண்ட்ராக்டர்களுக்குக் கொடுத்துவிட்டு பாவம் கக்கூஸ் எடுப்பது, சாக்கடை அள்ளுவது, தெருக் கூட்டுவது, குப்பை அள்ளுவது முதலியன செய்யும் நகர சுத்தி தொழிலாளர்கட்கு பணமில்லை—பணமில்லை என்று காலம் கடத்தி வந்தார் தலைமைக் குமாஸ்தா. வேறு காரணம் எதுவுமில்லை கண்டிராக்டர் பில்லுக்கு பணம் கொடுத்தால் 10 சதவீதம் இவருக்கு கமிஷனும். தோட்டிகளுக்கு சம்பளம் போட்டால் இவருக்கென்ன வருமானம்? இதுதான உண்மை. மேலும், உள்ளூரில் ஏதோ ஒரு நிதிக்காக பாட்டுக் கச்சேரி நடக்கப்போகிறதாம் அதற்கான டிக்கட் 1 ரூபாய் தொழிலாளர்கள் தலைக்கு ஒன்று வாங்குமாறு தலைமைக் குமாஸ்தா உத்தரவாம். தலைவர் ஆக்ஞையாம். காலம் கடந்த சம்பளத்திலும் ஒரு ரூபாய் அபராதமா என்று நகர சுத்தித் தொழிலாளர்கள் ரத்தக் கண்ணீர் வடித்து சம்பளம் பெறுகிறார்கள். காங்கிரஸ் நிதி சேகரிக்கும் விந்தையை என்னவென்று சொல்வது? (ந. கி)

தாடி வளருங்கள்!

திரு. காளா புத்திமதி

நாகபுரி, செப். 10—

நேற்று டவுன் ஹாலில் நடைபெற்ற கூட்டத்தில் பேசுகையில் முன்னாள் காங்கிரஸ் மகாசபை பொதுச் செயலாளர் திரு. காளா வெங்கட ராவ், க்ஷவர பிளேட்கள் இறக்குமதியை தடுத்து வருடா வருடம் 2 கோடி ரூபாய் மிச்சப்படுத்துவதற்காக இந்திய மக்கள் தாடி வளர்க்க வேண்டுமென்று வேண்டுகோள் விடுத்தார்.

பொன்மலையில் ஒரு லட்சம் பேர்

சீனத் திரைப்படத்தைக் கண்டு களித்தனர்

மாதர் மகாநாட்டில் 15,000 பெண்கள்

(டிரங்க் மூலம்)

பொன்மலை, செப். 14—

நேற்று இரவு பொன்மலை ரயில்வே தொழிற்சங்க மகாநாட்டின் போது, புதிய சீன மக்களைப் பற்றிய திரைப்படக் காட்சி நடைபெற்றபோது மகாநாட்டுப் பந்தலில் ஒரு பெரிய ஜனசமுத்திரமே திரண்டிருந்தது. சுமார் ஒரு லட்சம் பேர் திரண்டிருந்தனர். அப்படத்தில் தோழர் மா-சே-துங் தோன்றியபோது 2 லட்சம் கரங்கள் கரகோஷம் செய்தன.

நேற்று ரயில்வே மகாநாட்டை ஒட்டி நடைபெற்ற மாதர் மகாநாட்டில் சுமார் 15,000 பெண்கள் கூடியிருந்தனர். திருமதி பார்வதி கிருஷ்ணன் தலைமை வகித்தார்.

திருமதி சத்யவாணிமுத்து அம்மையார் (திராவிட முன்னேற்றக் கழக) மாநாட்டை ஆரம்பித்து வைத்துப் பேசினார்.

திருமதி உஷா டாங்கே (தோழர் எஸ். ஏ. டாங்கேயின் மனைவி) மாதர் மகாநாட்டிற்கு பம்பாய் மாதர் இயக்கத்தின் சார்பில் வாழ்த்துக் கூறினார்.

திரு என். எஸ். கிருஷ்ணன் கலைவிழாவைத் துவக்கிவைத்தார். 1 லட்சம் ஜனத்திரள் அவரை மெய் சிலிர்க்க வைத்து விட்டது.

பிறகு, திருமூர்த்தி கோஷ்டியாரின் கலை நிகழ்ச்சிகள் நடைபெற்றன.

தோழர் வி. சக்கரை செட்டியார் கணகாட்சியைத் திறந்து வைத்தார்.

தோழர் ராமமூர்த்தி பேசுகையில், சோவியத் தொழிற்சங்க காங்கிரஸிலிருந்து வரவிருந்த சகோதரப் பிரதிநிதிகள் குழுவிற்கு இந்திய சர்க்கார் அனுமதிச்சீட்டு வழங்காததை பலமாகக் கண்டித்தார்.

சிறு அளவு நிலங்களையும் அவசரச் சட்டத்தின் கீழ் கொண்டு வருக!

தஞ்சை ஜில்லா விவசாய மகாநாட்டின் முடிவுகள்

கும்பகோணம், செப். 11—

தஞ்சை ஜில்லா விவசாயிகள் மகாநாடு, திருவாரூரில் ஜில்லா விவசாய சங்கத் தலைவர் திரு. சிவகுருநாத பிள்ளை தலைமையில் நடைபெற்றது. தமிழ்நாடு விவசாய சங்கப் பொதுக் காரியதரிசி தோழர் பி. சீனிவாசராவும் மகாநாட்டில் கலந்துகொண்டார். பல முக்கியமான தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

ஒரு வேலிக்கும் குறைந்த நிலத்தில் பாடுபடும் விவசாயத் தொழிலாளர்களுக்கும், தஞ்சை பண்ணையாளர் அவசரச் சட்டத்தின்கீழ் அளிக்கப்பட்டுள்ள சலுகைகள் கிடைக்கும்படி செய்யவேண்டுமென்று ஒரு தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. இவ்வாறு செய்யப்படாவிட்டால், அவசரச்சட்ட ஷரத்துகளிலிருந்து தப்புவிக்க, நிலங்களை சிறுசிறு பகுதிகளாக பிரிக்கும் முயற்சி நடைபெற ஏதுவாகுமென்றும், அதன் மூலம் பெரும்பகுதிவிவசாயத் தொழிலாளர்களுக்கு அவசரச் சட்ட சலுகைகள் கிடைக்காது போயவிட நேருமென்றும் அந்தத் தீர்மானம் கூறுகிறது.

தலைவர் திரு. சிவகுருநா[illegible] பிள்ளை பேசும்பொ[illegible] தஞ்சை அவசரச்சட்[illegible] சாயத் தொழிலா[illegible] பெரிதும் வரவேற்[illegible] லும், அடிப்படைய[illegible] பிரச்சினைகள், [illegible] திருப்தி அளிக்கத்[illegible] தில் தீர்க்கப்படா[illegible] பதை எடுத்துக் காட்[illegible] முற்போக்கான அம்ச[illegible]

கொண்ட விரிந்த விவசாய சீர்திருத்தச் சட்டம் நிறைவேற்றப்படுவதன் மூலம் தான், விவசாயிகளுக்கு திருப்தியளிக்க முடியும் என்றும், விவசாய சீர்திருத்தங்களை சர்க்கார் செய்ய முற்படுமுன் விவசாய சங்கங்களைக் கலந்துதான் செய்ய வேண்டுமென்றும் கூறினார்.

அதிக உணவு பயிரிடுக, என்ற திட்டம் தோற்றது. கொள்முதலுக்காக சர்க்கார் கொடுத்த மான்யமும் மிராசுதார்கள் பெட்டியில்தான் போய் விழுந்தன. நிலத்தில் ஒரு பகுதியை கட்டாயமாக வருடா வருடம் ஒதுக்கி அபிவிருத்தி செய்ய ஏற்பாடு செய்யப்பட வேண்டும் என்றார்.

அடுத்துப் பேசிய தோழர் சீனிவாசராவ், பண்ணை முறையை சிறுகச் சிறுகக் குறைக்க வேண்டுமென்றும், இல்லாவிடில், விவசாயத் தொழிலாளர்களுக்கு விரோதமான நிலச்சுவான்தாரி முறை விஷவேர் விடுவதற்கு ஏதுவாகும் என்றார்.

அவசரச் சட்டப்படி வெளியேற்றப்படும் விவசாயிகளுக்கு சர்க்கார் நிலம் [illegible] வேண்டுமென்று[illegible] முறையை எவ்[illegible] முடியுமோ[illegible]

மத்ய கிழக்கு ஆக்கிரம[illegible] நகீப் சேருவா[illegible]

ராஜ தந்திர வட்டாரங்களில் ஹேஷ்யங்கள்

கெய்ரோ, [illegible] 13—

எகிப்திய சர்க்[illegible] படையான அ[illegible] கொள்கையை நகீப் ஐந்து [illegible] வெகு சீக்கிரம் [illegible] அடிப் [illegible] ட்டுக் [illegible] றுக்க [illegible] டிகளை [illegible] யமனம் [illegible]

கம்யூனிஸ்ட் கட்சியை எதிர்க்கட்சியாக அங்கீகரி!

மங்களூரில் தோழர் ஏ. கே. ஜி. அறைகூவல்

மங்களூர், செப். 13—

பார்லிமெண்டில் அதிகார பூர்வமான எதிர்க்கட்சியாக கம்யூனிஸ்ட் கட்சியை உடனடியாக சர்க்கார் அங்கீகரிக்க வேண்டுமென்று பார்லிமெண்ட் சபாநாயகரைக் கோரியிருப்பதாக தோழர் ஏ. கே. கோபாலன் எம்.பி, இன்று ஒரு பொதுக் கூட்டத்தில் பேசும்பொழுது அறிவித்தார்.

இதுவரை கம்யூ[illegible] ளில் [illegible] கட்சியை அதிகாரபூர்வ[illegible] கட்சியாக சாக[illegible] யாதது நியாய[illegible] சர்க்காரின் [illegible]

கட்சி நிச்சயம் [illegible] என்றார்.

அவசியம் [illegible] எந்தக் கட்சி[illegible] சோஷலிஸ்டு[illegible] பென்று செ[illegible] நாட்டுக்கு நன[illegible] ஏனென்றால் எ[illegible] யான கட்சியும் [illegible] னுள்ள பிரச்சினைகளை [illegible] முடியாது என்று [illegible] திருத்தமாகக் கூறின[illegible]

தோழர் கோபால[illegible] [illegible]

சர்க்கரை தடவிய விஷமாத்திரை

மத்தியக் கிழக்கு ஆக்கிரமிப்பு அணிக்கு அமெரிக்கா அளிக்கும் புது ரூபம்

எகிப்திற்கு சுருக்குமாட்ட முயற்சி

நியூயார்க், செப். 13—

மத்தியக் கிழக்கில் புதிய ஆக்கிரமிப்பு ஸ்தாபனம் ஒன்றை நிறுவுவதற்கு அமெரிக்கா திட்டம் தயாரித்துள்ளதாகவும், அடுத்த வாரம் பிரிட்டனிடம் இது சமர்ப்பிக்கப்படுமென்றும் அமெரிக்கப் பத்திரிகைகள் கூறுகின்றன.

மத்திய கிழக்கிலுள்ள அரபு நாடுகளுக்கு, குறிப்பாக எகிப்திக்கு திருப்தியளிக்கும் ரீதியில் இந்த திட்டம் தயாரிக்கப்படுகிறதாம்.

அமெரிக்க பிரிட்டிஷ் ஏகாதிபத்தியங்கள் ஏற்படுத்த நினைத்த மத்தியக்கிழக்கு ஆக்கிரமிப்புகூட்டணிதிட்டத்தை எகிப்து ஒரு வருடத்திற்கு முன்பே நிராகரித்துவிட்டது. எனவே, பழைய சுருக்குக் கயிறை மீண்டும் புதிய மலர் மாலை ரூபத்தில் தயாரிக்க அமெரிக்கா திட்டமிட்டுள்ளது.

மத்தியக் கிழக்கு கூட்டணி என்பதற்குப் பதிலாக மத்தியக் கிழக்கு 'தற்காப்பு' ஸ்தாபனம் என்று பெயர் மாற்றப்படுமாம். இந்த திட்டத்தை உடனடியாக அரபு நாடுகள் ஒப்புக்கொள்ளும்படி செய்ய புது முயற்சி செய்யப்படுமாம்.

மத்தியக் கிழக்கில் ஆக்கிரமிப்பு ராணுவக் கூட்டணி ஏற்படுத்தி அமெரிக்கா, பிரிட்டன், பிரான்ஸ், துருக்கி, ஆஸ்திரேலியா, நியூஜிலாந்து, தென் ஆப்ரிக்கா முதலிய போர்வெறி நாடுகள் இவ்வருட ஆரம்பத்திலிருந்தே ஆலோசனை நடத்தி வருகின்றன.

ஹிட்லர் ஆட்சியில் 60 லட்சம் யூதர் பலி

பெர்லின், செப். 13—

ஹிட்லர் ஆட்சியில் கொல்லப்பட்ட 50 லட்சம் யூதர்கள் ஞாபகார்த்தமாக மேற்கு ஜெர்மனி சினகாக்ஸ் எனுமிடத்தில் பிரார்த்தனைக் கூட்டம் நடந்தது. யூத சமூகத் தலைவர் ஹீன்ஸ் காலின்ஸ்கி தலைமை வகித்தார்.

சீனாவிற்கு தலாய்லாமா நல்லெண்ண தூதுகோஷ்டி

கல்கத்தா, செப் 13—

தலாய்லாமா 15 பேர் கொண்ட சீனா செல்லும் திபேத் நல்லெண்ண தூதுகோஷ்டியினர், கலிம்பாங்கிலிருந்து பீகிங் செல்லும் வழியில், இன்று கல்கத்தா வந்துள்ளனர். விமான நிலையத்தில் சீன கன்சல் ஜெனரல் வரவேற்றார்.

தூதுகோஷ்டியில் பலமடங்களைச் சேர்ந்த வயதுமுதிர்ந்த லாமாக்களும், இரு பெண்களும் உள்ளனர். இவர்கள் கல்கத்தாவில் சீன கன்சல் ஜெனரல் விருந்தினராயிருப்பர்.

பஞ்சன் லாமா பிரதிநிதிகளைக் கொண்ட மற்றொரு நல்லெண்ண திபேத தூதுகோஷ்டி சிங்கியாங் வழியாக பீகிங் புறப்பட்டு விட்டனர் என்று தெரிகிறது,

5 வல்லரசு கூட இந்தியா முயற்சி எடுக்கவேண்டும்

அ. இ. கா. க. தீர்மானத்திற்கு திருத்தம்

சந்திரசேகரநகர் செப். 14—

காங்கிரஸின் வெளிநாட்டுக் கொள்கை பற்றிய மௌலானா ஆஜாத் பிரரேபித்த தீர்மானத்தை எஸ். கே. பாட்டில் ஆமோதித்துப்பேசினார்.

திரு. அல்குராய் சாஸ்திரி 3 திருத்தங்களைப் பிரரேபித்தார்.

திரு நாதுலால் ஜெயின் (ராஜஸ்தான்) பிரரேபித்த ஒரு திருத்தத்தில், 5 வல்லரசுகள் ஒன்றுகூடி மகாநாடு நடத்துவதற்கு இந்தியா அவர்களை அழைக்க வேண்டும் என்று கூறினார்.

கொரிய வைத்தியப்படையை தெ. கொரியாவிலிருந்து வபாஸ் வாங்குவது நகல் தீர்மானத்திற்கு முரணானது என்று திரு. விஸ்வநாத்தாஸ் கூறினார்.

இறுதியில் ஆஜாதின் வேண்டுகோளின்படி திருத்தங்களெல்லாம் வாபஸ் பெற்றுக் கொள்ளப்பட்டன. அல்லது நிராகரிக்கப்பட்டன.

உலகப் பிரச்னைகளை தீர்க்க...

(முதல் பக்கத் தொடர்ச்சி)

விற்கு முன்பே அங்கீகார[illegible]த்திருந்தால் சம்பவங்க[illegible] பார்க்[illegible]ளமாறு விதமாக [illegible]டிம[illegible] [illegible]விருவது அட்ச[illegible] [illegible]ளர்க்கக கூடா[illegible] [illegible]கள்சரிக்கை சம[illegible] [illegible]க்கு தியாவின் [illegible] ஒரு [illegible] நா. ஏற் [illegible] ஆஜாத் [illegible] தியாவின [illegible]ளத் கண்டு [illegible] 3, 4 மாதங் [illegible]ரிய யுத்தத்தை [illegible] விடுவதாக ஜெனரல் [illegible]ஆர்தர் கூறியிருந்தார்.

ஆனால் அத்தகைய ஊகங்கள் தவறென்பதை சம்பவங்கள் நிரூபித்து விட்டன.

"ஜப்பானிய உடன்படிக்கை விஷயத்திலும்இந்தியா சுயேச்சையான ஒரு கொள்கையைப் பின்பற்றியது. அந்த ஒப்பந்தம் நம்மால் நிர்ணயிக்கப்பட்ட கோட்பாடுகளுக்கு அது முரணாக இருக்கிறதென்று நாம் கண்டதும், நாம் வேறொரு ஒப்பந்தம் செய்து கொண்டோம். இந்தியா ஒரு நடுநிலைமைக் கொள்கையைக் கடைப்பிடிக்கவில்லை என்பதற்கு இவை சில உதாரணங்கள். ஆனால் உண்மையையும், நியாயத்தையும் அடிப்படையாகக் கொண்ட ஒரு சுயேச்சையான கொள்கையைத்தான் இந்தியா கடைப்பிடிக்கிறது.

"மனித சமூகம் [illegible] இருப்பதையே [illegible] பிரச்னைகள் வ[illegible] விதியாக[illegible] எவ்வா[illegible] [illegible]

வும், மனித சமூகத்தைக் காப்பாற்றவும் ஐ. நா. கடமைப்பட்டுள்ளது. ஆனால் ஐ, நா. தன் கடமையில் வெற்றியடையவில்லை என்பதற்காக இந்தியா அதிலிருந்து விலகிக் கொள்ள முடியாது.

ஐ. நா.வின் மூலம் உலக சமாதானம் ஏற்படுத்துவதென்பது கானல் நீராகப் போய் விட்டாலும், இந்தியா அந்த ஸ்தாபனத்தின் மூலமாகவே சமாதானத்தை பலப்படுத்தும் தன்னுடைய கொள்கையைத் தொடர்ந்து கடைப்பிடித்து வரும். ஏனெனில் இப்பொழுது அத்தகைய ஒரு ஸ்தாபனம்தான் இருக்கிறது" என்றார்.

பின்னர் தீர்மானம் ஏகமனதாக நிறைவேறியது.

இலங்கை இந்தியர் சத்தியாக்கிரகம் நிறுத்தி வைக்கப்பட்டது

கொழும்பு, செப். 14—

கடந்த 4½ மாத காலமாக இலங்கை, இந்தியர் காங்கிரஸ் நடத்திவந்த சத்தியாக்கிரகத்தைப் பற்றியும், இலங்கை பிரதமர் டட்லி சேனநாயகா இலங்கை வாழ் இந்தியர்களின் பிரஜா உரிமை மனுக்களை தாராளமாகவும் துரிதமாகவும் பரிசீலனை செய்வதாக சமீபத்தில் உறுதிமொழி அளித்ததைப் பற்றியும் விவாதித்த இலங்கை இந்திய காங்கிரஸ் காரியக் கமிட்டி, சத்தியாக்கிரகத்தை நிறுத்திவைப்பதென்று முடிவு செய்துள்ளது.

பாகிஸ்தான் பஞ்சாப் பிரதமர் சீறுகிறார்!

லாகூர், செப். 13—

"பாகிஸ்தானின் பொருளாதார ஸ்திரத்தன்மையை சீர்குலைக்கும் நோக்கத்துடன், பிரிட்டன் இந்தியாவோடு ஒப்பந்தம்செய்துகொண்டுள்ளது. ஆனால் அதையெல்லாம் சமாளித்து பாகிஸ்தான் வாழும்", என நேற்றிரவு ராவல்பிண்டியில்பாகிஸ்தான் பஞ்சாப் பிரதமர் மியான் மும்தாஜ் தௌலதானா கூறினார்.

"காஷ்மீர் பிரச்சினையை, ஐ. நா. தீர்த்துவிடும் என்று எதிர்பார்ப்பது வீணே. அது ஆங்கிலோ-அமெரிக்க கைபாவையாக இருப்பதால், இந்தப் பிரச்சினையையும் அது தீர்க்க சக்தியற்றது" எனவும் அவர் கூறினார்.

தென் ஆப்பிரிக்க தீர்மானத்தை அ. இ. கா. கமிட்டி நிறைவேற்றியது

சந்திரசேகரநகர், செப். 14—

இனவெறியும் தென் ஆப்பிரிக்க சத்யாக்கிரகமும் பற்றி அ. இ. கா. கமிட்டி தீர்மானத்தை ஏகமனதாக இன்று நிறைவேற்றியது. திரு. பண்டித பந்த் தீர்மானத்தை பிரேரேபித்தார். திரு. மொரார்ஜி தேசாய் அதை ஆதரித்தார்.

அ. இ. கா. க. கூட்டம் ஒத்திவைப்பு

சந்திரசேகரநகர், செப். 14—

இன்று காலையில் வெளிநாட்டு கொள்கை, தென் ஆப்பிரிக்கா பற்றிய தீர்மானங்களை நிறைவேற்றிய பிறகு அ. இ. கா. கமிட்டி கூட்டம் மாலை 2½ மணிக்கு ஒத்திவைக்கப்பட்டது.

பீகிங்கில் இந்தியஸ்தானிகர்

பீகிங், செப். 13—

சீன மக்கள் குடியரசின் இந்திய ஸ்தானிகராக நியமிக்கப்பட்டுள்ள திரு. என். ராகவன் இன்று காலை ரயில் மார்க்கமாக பீகிங் வந்து சேர்ந்தார் என நவசீன செய்தி ஸ்தாபனம் அறிவிக்கிறது.

யுத்தத்தை தவிர்ப்பதே.

(முதற்பக்கத் தொடர்ச்சி)

வழிகாட்டுதல் வீர வேண்டும்" என்றார்.

பிறகு ஐந்தாண்டுத் திட்ட விவாதம் முடிந்து திட்ட நகல் பூர்த்தியடையும் தருவாயிலிருக்கிறது என்றார்.

யுத்தத்தை யாரும் விரும்பவில்லை

நேரு மேலும் பேசுகையில் இந்த உலகத்தில் யாராவது யுத்தத்தை விரும்புகிறார்கள் என்பதை என்னால் நம்பமுடியாது. [illegible]யினும் இருக்கும் சூழ்நிலை[illegible]ந்தாலும், சம்[illegible]ங்கள் செல்[illegible]யையும், வே[illegible]யும் பார்த்[illegible] நோக்கி[illegible] [illegible]ர்கள் [illegible] ப[illegible]த் [illegible] லாள[illegible] பார்[illegible] [illegible] களுக்கு [illegible] விடுத்[illegible] அர்த்தப் [illegible]யில் இந்தியா [illegible]ன சந்தே[illegible] பொருந்திய [illegible]க்கு [illegible]லாமல் இருக்க [illegible]விக்கும[illegible] இந்தியா [illegible] பற்[illegible] [illegible]னியாயத்திற் [illegible]கிறல[illegible] இடை[illegible]

யஸ்தம் செய்து [illegible] வேலையை நாம் எடு[illegible] கொள்ள விரும்பவில்லை[illegible] லும், எப்பொழுதாவது[illegible] முடைய கருத்தைத் [illegible] விக்க வேண்டிய சந்[illegible] ஏற்பட்டால், கொ[illegible] தயக்கமின்றி அதை[illegible] வோம்" என்றார்.

தெ. ஆப்ரிக்கப் [illegible]

தெ. ஆப்ரிக்காவி[illegible] பிரச்னையை எவ்வா[illegible] பது என்பது தா[illegible] தின் முன்னுள்ள மிகப்[illegible]ம் பிரச்னை. சமாதான[illegible] மாகவா? ரத்தக் களறியில[illegible] தெ. ஆ. மக்கள் ஆயுதங்க[illegible] உபயோகிக்க முடிவெடுத்தால் அதன் பலன் எப்படியிருந்தாலும், அது உலகத்திற்கு நாசம் விளைவிக்கும்.

அநியாயமான சட்டங்களை தெ. ஆப்ரிக்க மக்கள் அஹிம்சா பூர்வமாக எதிர்த்து வருகின்றனர்.

இந்தப் பிரச்னையின் ஒரு பெரிய அம்சம் என்னவெனில், ஆப்ரிக்க மக்கள் விழித்தெழுந்து விட்டார்கள் என்பதே.

நாட்டில் பஞ்சம்

ராயலசீமா, மைசூர், [illegible] தரப் பிரதேஷ் ஆகிய [illegible] களில் நிலவும் பஞ்சத்தைப் பற்றிக் குறிப்பிடுகையில், கடுமையான உழைப்பின் மூலம் தான் மக்களின் வறுமையைப் போக்க முடியுமென்றார்.

சோஷலிஸ்ட் - பிரஜா கட்சி பொறுப்புகள் பற்றி லோஹியா

கோட்பாடுகளில் அடிப்படை இல்லாமல் கொள்கை வகுப்பது

கல்கத்தா, செப். 13—

"புதிதாக இணைந்துள்ள சோஷலிஸ்ட் — பிரஜா கட்சியானது உடனடியாக விரிந்த அளவில் ஆக்க வேலைகளில் ஈடுபட்டு, ஓட்டுப் பெட்டிகள் மூலம் ஸ்தல ஸ்தாபனங்களைக் கைப்பற்றி, மக்களிடையே சோஷலிஸம் வேரூன்றும்படி செய்ய வேண்டும்" என இன்று டாக்டர் ராம்மனோஹர் லோஹியா சோஷலிஸ்ட் ஊழியர் கூட்ட மொன்றில் கூறினார்.

"இந்தப் புதிய இணைப்பின் முதல் 4, 5 மாதங்கள் மிகவும் சிரமம்நிறைந்ததாகவிருக்கும். எழுப்பப்பட்டுள்ள நம்பிக்கையை ஆக்க வேலைகளின் சாதனைகளால் தான் உருவாக்க முடியும்" என்றார்.

"அதிகாரத்தைக் கைப்பற்ற வேண்டும் என்ற நோக்கத்திற்காகவே எதையும் செய்துவரும் கம்யூனிஸ்ட்களைப் போலல்லாமல், சோஷலிஸ்ட்களின் தனிப்பட்ட ஒவ்வொருவரது வேலையும் சுயமானதாகவும் தகுதி வாய்ந்ததாகவும் இருக்க வேண்டும்" என்று உரைத்தார்.

ரங்கூனில் நடக்கவிருக்கும் அகில—ஆசிய சோஷலிஸ்ட் மகாநாடு பற்றிக் குறிப்பிடும் பொழுது சகல ஆசிய சோஷலிஸ்டுகளும் ஏற்றுக் கொள்ளும்படியான கொள்கைகள், பொதுப் பிரச்னைகள், விவசாய சீர்திருத்தங்கள், உலக சமாதானத்தைப் பாதுகாப்பதில் ஆசிய சோஷலிஸ்டுகளின் கடமைகள் ஆகியவை பற்றியும் விவாதிக்கப்படும் என்றார், நவம்பர், டிசம்பரில் அநேகமாக நடக்கலாமென்று எதிர்பார்க்கப்படும் அந்த மகாநாட்டிற்கு 150 இந்திய சோஷலிஸ்ட்கள் செல்வார்கள் என்றும் கூறினார்.

"ஆசிய சோஷலிஸ்ட்கள் முதலில் ஒரு கொள்கையை ஏற்றுக் கொண்டு, பிறகு சமாதானமான [illegible] யில் அதிகாரத்தைக் [illegible] பற்ற முயல்வார்கள் [illegible] கோட்பாடுகளின் அடிப்[illegible] யில்லா[illegible] [illegible]

தக்கவாறு இன்றுள்ள சில சோஷலிஸ்ட்களால் கொள்கைகள் நிர்ணயிக்கப்படுகின்றன" என்றும் அவர் கூறினார்.

நியாய விலைக் கடைகளில் தானியம் இல்லை

கிருஷ்ணகிரி, செப். 12—

கிருஷ்ணகிரி பிர்க்காவில் பருவ மழையில்லாது பயிர்களெல்லாம் தீய்ந்து சாவியாகிப் போய் விட்டன. இதனால் விவசாயிகள் பெரு நஷ்டம் அடைந்துள்ளார்கள். விவசாயத் தொழிலாளர்கள் வேலையின்றி அவதிப்படுகிறார்கள். நியாய விலை கடைகளில் தானியம் கிடைப்பதில்லை. பெருவாரியான விவசாயிகள் தங்கள் கிராமங்களிலிருந்து வேலைதேடி பெல்லாரி, பெஜவாடா, குண்டூர் முதலிய இடங்களுக்குச் சென்றுக் கொண்டிருக்கின்றனர்.

உணவுப் பொருள்களின் விலையும் நாளுக்கு நாள் விஷம்போல் ஏறிக் கொண்டிருக்கிறது.

அமெரிக்க தேர்தல் அமளியில் அக்கீசன்

கான்சாஸ்சிடி, செப். 12—

அமெரிக்க அயல் நாட்டுக் கொள்கையை தீவிரமாக மாற்றியமைத்து, கிழக்கு ஐரோப்பிய நாடுகளை 'விடுதலை' செய்ய வேண்டுமென ரிபப்ளிகன் கட்சியினர் செய்யும் தேர்தல் பிரச்சாரத்தை அமெரிக்[illegible] வெளிநாட்டு மந்திரி [illegible]ன, தவறு என நிராகரி[illegible] [illegible] ராஜ[illegible] [illegible]ண்டு [illegible]க்கென [illegible]

Ed[illegible] by G. [illegible] Press, [illegible] 38, Mou[illegible]

மக்களின் நிலைமை தெரியாத மந்திரிகள்

காங்கிரசின் அவல ஆட்சியை ஆதித்தன் அம்பலப்படுத்துகிறார்

தூத்துக்குடி, செப். 10—

10-9-52 மாலையில் சென்னை சட்டசபை ஐ. ஐ. மு. பொதுக் காரியதரிசி திரு. எஸ். பி. ஆதித்தன் எம். எல்.சி. இங்கு விஜயம் செய்தார். ரயில் நிலையத்தில் ஏராளமான மக்கள் கூடி நின்று உற்சாகமாக ஆதித்தனை வரவேற்றனர். தோழர் எஸ். ஏ. முருகானந்தம் மலர்மாலையிட்டு வரவேற்றார்.

பின்னர் நகர லாஞ்ச், டிராஜர் தொழிலாளர் தகராறு விஷயமாய் சங்க காரியதரிசி தோழர் வி. சங்கரநாராயணனுடன் சப்-கலெக்டரை பேட்டிகாண சென்றார். கலெக்டர் ஊரில் இல்லையாதலால் கடிதமெழுதியுள்ளார்.

இரவு 7 மணிக்கு ஐக்கிய முன்னணி வாசகசாலை சார்பில் ஒரு மாபெரும் பொதுக் கூட்டம் நடைபெற்றது. தோழர் கே. வெற்றிவேல் தலைமை வகித்தார். தோழர்கள் எஸ். ஏ. முருகானந்தம் வி. சங்கரநாராயணன் முதலியவர்கள் பேசியபின் திரு ஆதித்தன் பேசினார். அவர் பேசியதாவது:—

சுதந்திரத்தின் ருசி

சென்னையில் சுதந்திர தின விழாவில் பேசும் பொழுது" மக்கள் சுதந்திரத்தின் ருசியை அறியவில்லை. காரணம் அவர்களுக்கு புத்தி குறைவு" என்று ராஜாஜி கூறினார். சுதந்திர தினத்தன்று கவர்னர் மாளிகையில் மந்திரிகள், மில் முதலாளிகள் முதலியோரடங்கிய (2000 பேர்கள்) [illegible]

[illegible]

ஒரு வரிக்கு சமாபதி!

சர்க்கார் புதிதாகக்கொண்டு வந்துள்ள வரிகளில் ஒன்று [illegible]

பஸ் வரி

[illegible] இதைக்கொண்டு [illegible] என சர்க்கார் கூறுகிறது. சட்டசபை காங்கிரஸ்கட்சியில் இருப்பவர்கள் யார்? செட்டிநாட்டு ராஜா, இராமநாதபுரம் ராஜா, கபிலேஸ்வரம ராஜா ஒய்யூர் ராஜா, கார்வேட்நகர் ராஜா போன்றவர்கள் தானே? விளையாடும் சீட்டுக்கட்டில் கூட நான்கு ராஜாக்கள் தான், ஆனால் காங்கிரஸ் எம். எல். ஏ.க்களில் ஏழு ராஜாக்கள் இவர்களுக்கு பஸ் பிரயாணத்தைப் பற்றி என்ன தெரியும்?

ரேஷன் ரத்தும் அரிசி விலையும்

ரேஷன் ரத்தால் யாருக்கு லாபம்? காங்கிரஸ்காரர்கள் இதை ராஜாஜியின் மகத்தான சாதனையென்கிறார்கள். ஜூன் 27ந் தேதி அனந்தப்[illegible]ரில் ராஜாஜி பேசும்பொழுது [illegible]ண்டும் கூறினார்: அரிசிவிலை [illegible]றையுமென்று 'விலை குறை[illegible]விடில் ராஜினமா செய்து விடுகிறேன் என்றார்.

[illegible]சிறிது நாட்களுக்குப் பின் [illegible]சாவூரிலும் பல இடங்க[illegible]ம் அரிசி விலை ஏறியது. [illegible]தப்பற்றிக் கேட்ட[illegible]ழுது குருவை நெல் வந் [illegible] சரியாகிவிடும் என்றார் [illegible] சுப்ரமண்யம். குருவை [illegible] விளைச்சல் தகருருக்கு [illegible]வரி நதியில் தண்ணீர் [illegible]டுப்பாடு, மேட்டூர் அணையில் தண்ணீர் குறைவுதான் காரணங்கள் என்ற போது தோழர் ராமமூர்த்தி அப்படியானால் உங்கள் பிரார்த்தனை" என்னவாயிற்று என கேட்டார். (கரகோஷம்).

மிராசுதார்கள் கூறுகிறார்களே!

அரிசிவிலை கூடவில்லை என தஞ்சை மிராசுதார்கள் கூறுகிறார்களே என்கிறார் ராஜாஜி. தினத்தந்தி, ஜனசக்தி போன்ற பத்திரிக்கைகளை நீங்கள் நம்ப வேண்டாம் ஆனால் உங்கள் "ஹிந்து" வில் அரிசி விலை அதிகரித்திருக்கிறது என்று செய்திகள் வருகின்றனவே, உங்கள் அனந்தப்பூர், பேச்சு அருப்புகோட்டை பேச்சுதா[illegible] என்றால் எதிர்க்கட்சியினருக்[illegible] [illegible]டும் என்னும் உறுதி[illegible] [illegible]ல் ஆரம்பம் நாக்கில் [illegible]ருந்தனர்.

நாக்கில் தண்ணீர் வடிவது யாருக்கு? காங்கிரசை எதிர்த்து வெற்றி பெற்று பதவிக்காக "மக்கள் துரோகி" களாக மாறிய பக்தவச்சல நாயுடு, மந்திரி மாணிக்கவேலர்களுக்கல்லவா நாக்கில் ஜலம் வடிவது. ஆனால் நாங்கள் (ஐ ஐ.மு) கண்ணீர் வடிக்கிறோம் உங்கள் அவல ஆட்சியைக் கண்டு.

பட்டினிச் சாவு கிடையாதாம்!

இன்று நாட்டில் பசி, பட்டினியால் மக்கள் மடிந்துகொண்டிருக்கிறார்கள். ஆனால் மந்திரி சுப்பிரமணியம் பட்டினியால் யாரும் சாகவில்லை, வயிற்றுக்கோளாறு, காலராவினால் தான் சாகிறார்கள் என்கிறார். இந்த வியாதிகள் வருவது சரியான ஆகாரமில்லாததால் தானே?

கஞ்சித் தொட்டி

கஞ்சித்தொட்டியில் நோயாளிகளுக்கும், கர்ப்பிணிகளுக்கும் தான கஞ்சிவார்க்கப்படுகிறது. இதற்குகூட சில இடங்களில் பத்துமைல் நடந்துவர வேண்டியதிருக்கிறது. இங்கு ஊற்றப்படும் கஞ்சியோ மோசம். மாஜி மந்திரி முனுஷி ஒரு தடவை கஞ்சித் தொட்டி ஒன்றுக்கு விஜயம் செய்தபொழுது கொஞ்சம் கஞ்சியை வாயில் ஊற்றிப் பார்த்த பொழுது அவரால் அதை விழுங்கக் கூட முடியவில்லை.

சொர்க்கமா?

வேலையில்லாம சகலருக்கும் வேலை கொடுங்கள் அல்லது கஞ்சி கொடுங்கள் என்று சொன்னால் [illegible] "சொர்க்கமா" என்கிறார் ஆச்சாரியார். [illegible]

[illegible] மந்திரி நீங்கள் திருப்பிதர மாட்டீர்களே என மறுக்கிறார்.

சகலருக்கும் வேலை கொடுக்க வழி

நெல்லை ஜில்லாவில் ஏராளமான நல்ல சுண்ணாம்புக் கல் கிடைக்கிறது. இதைக் கொண்டு நல்ல சிமெண்ட் செய்யலாம் இதனல் 25,000 பேர்களுக்கு வேலை கிடைக்கும். இதேபோன்று இராமநாதபுரம் ஜில்லாவில் ஓடு செய்வதற்க்கேற்ற களி மண், தெ. ஆ. ஜில்லாவில் 10 சதுர மைல் பிரதேசத்தில் 200 கோடி டன் நிலக்கரி, சேலம் மாவட்டத்தில் இரும்பு கலந்த மண் (இந்த மண்ணை ஜப்பானிய நிபுணர்கள் பார்வையிட்டனர்) முதலியவை கிடைக்கிறது. இவைகளைக் கொண்டு பல ஆயிரக் கணக்கானவர்களுக்கு வேலை கொடுக்கலாம்.

வரி செலுத்தமாட்டோம்

நீங்கள் இந்த புதிய அநியாய வரிகளை செலுத்தமாட்டோம் என உறுதியுடன் கூறுங்கள். சட்ட சபையில் இந்த வரிகளை எதிர்த்து வெற்றிபெற முடியாவிடில் வெளியில் மக்கள் நிச்சயம் எதிர்த்துப் போராடி வெற்றி பெறுவார்கள். (கரகோஷம்).

சூழ்ச்சிக்கு இடம் கொடாதீர்

ஆச்சாரியார் எதிர் கட்சிகளை பிரிக்க முயற்சிக்கிறார். இதற்கு இடம் கொடாதீர்களென்று கம்யூனிஸ்ட் தி. மு. க., தி. க. மற்றும் தோழர்களை வேண்டிக் கொள்கிறேன். கம்யூனிஸ்டுகள் ராஜாஜியின் எதிரிகள் என்றால் மக்கள் ராஜாஜியின் எதிரிகள் என்று அர்த்தம். கம்யூனிஸ்டுகள் மீது மீண்டும் கை வைப்பது அவ்வளவு சுலபமல்ல. உழைப்பாளர் கட்சி, பிரஜா கட்சி முதலிய கட்சிகளின்மீது கைவைத்த பின்தான் கம்யூனிஸ்டுகளைத் தொடமுடியும்.

உபதேசம்

மூன்று தினங்களுக்குமுன் கவர்னர் பிரகாசா மதுரையில் காந்திஜி சிலையைத் திறந்து வைத்து காந்திஜி வழியைப் பின்பற்றுங்கள் என்றார். ஆனால் அவர் பின்பற்றுகிறார் எனக் கூறமுடியுமா? பின்பற்றினால் பத்து லட்ச ரூபாய் சம்பளமேன்?

புதிய சமுதாயம் அமைக்க

ஆகவே ஏழை—பணக்காரனற்ற, சுரண்டப்படுபவன்—சுரண்டுபவன் இல்லாத, சகலருக்கும் வேலை, உணவு, உடை, வீடு [illegible] புதிய சமுதாயத்தை உருவாக்க [illegible]

கூட்டத்தில்,

1. நெல்லை, ராமநாதபுரம் சதிவழக்குகளை வாபஸ் வாங்கக் கோரியும், தோ. பாலதண்டாயுதம் மீதுள்ள வாரண்டை ரத்து செய்ய வற்புறுத்தியும்,
2. மில் தொழிலாளர்களுக்கு உடனடியாக சேவிங்ஸ் பண்ட் பணத்தை கொடுக்கும் படியும்,
3. ஐக்கிய தமிழகத்தை உருவாக்க மக்கள் ஒன்றுபடவும்,
4. சஸ்பெண்ட் செய்யப்பட்டுள்ள லாஞ்ச், டிராஜர் தொழிலாளர்களை மீண்டும் வேலைக்கு எடுத்துக்கொள்ள வற்புறுத்தியும்,
5. ஹார்வி மில்லில் பழிவாங்கப்பட்டுள்ள தொழிலாளர்களுக்கு வேலை கொடுக்கும்படி கேட்டும், தீர்மானங்[illegible] ஏகமனதா[illegible] நிறைவே[illegible]

தோழர் பி. கருப்பண்ணனுக்கே ஓட்டளியுங்கள்!

வருகிற 17-9-52 நகர சபை தேர்தலில் நான் ஐந்தாவது வட்டத்தில் ஒரு அபேட்சகனாக போட்டியிட்டிருந்தேன் என்பது உங்கள் எல்லோருக்கும் தெரிந்ததே! இன்றைய சூழ்நிலையில் நன்கு சிந்தித்துப்பார்த்தால் சுயேச்சையாளராக போட்டியிடுவது, காங்கிரஸ் வெற்றி பெற வாய்ப்பளிப்பதாகும். ஆகவே, வருகிற 17-9-52 புதன் நடைபெறும் தேர்தலில் ஐந்தாவது வட்டம் மக்கள் அனைவரும் முற்போக்கு இயக்கமாகிய, நகர மக்கள் கூட்டணி அபேட்சகரான தோழர் பி. கருப்பண்ணன் அவர்களுக்கு "புலி" பெட்டியில் உங்கள் ஓட்டுகளைப் போட்டு வெற்றி தர வேண்டுகிறேன்.

என்னுடைய "நாற்காலி" சின்னமுள்ள பெட்டியில் உங்கள் ஓட்டுகளைப் போடாமல் "புலி"ப் பெட்டியில் போட்டு தோழர் பி. கருப்பண்ணன் அவர்களை ஆதரிக்குமாறு கேட்டுக் கொள்கிறேன.

எஸ். பி. டி. திராவிடமணி
14—9—52

அமெரிக்க மூலதனத்திற்கு உருக்குத் தொழிலை அடகு வைப்பதேன்?

வங்காள முன்னாள் மந்திரி சவால்

கல்கத்தா, செப். 13—

"இந்திய உருக்கு தொழில் இந்திய மூலதனத்தின் மூலமாகத்தான் வளரவேண்டுமேயல்லாது நிபந்தனைகளுடன் கூடிய அன்னிய உதவியினாலல்ல," என்று வங்காளத்தின் முன்னாள் அமைச்சர்களில் ஒருவரான திரு. டி. சி. கோஸ்வாமியும், திரு. எஸ். ஆர். பக்ஷியும், தேசிய கலப்பு கட்சியினரான திரு. ஜகதீஸ் சந்திர சின்ஹாவும் இன்று கூட்டாக ஒரு அறிக்கை விடுத்துள்ளனர்.

இந்திய உருக்குத் தொழிலுக்காக சர்வ தேச பாங்கியிலிருந்து 4 கோடி டாலர் எதிர்பார்க்கப்படுகிறது என்று மத்திய சர்க்கார் வர்த்தக, தொழில் மந்திரி திரு. டி. டி. கிருஷ்ணமாச்சாரி நேற்று கூறியுள்ளதைப்பற்றி பேசுகையில் மேற்கூறியவாறு சொன்னார்கள்.

"எந்த நிபந்தனையின் பேரில் நாட்டின் இந்த பெரும் ஆயுத தொழில்கள் அன்னியர்களிடம் பல வருடங்களுக்கு அடகு வைக்கப்படுகிறது என்பதை மக்களுக்கு தெரிந்து கொள்ள உரிமை இருக்கிறது. எந்த காரியத்தை செய்ய டாக்டர் முஸாதிக் ஈரானில் மறுத்தாரோ அதே காரியத்தை ஏன் நமது பிரதம மந்திரி சுதந்திர இந்தியாவில் வேறொரு முறையில் அனுமதிக்க வேண்டும்" என்று அவர்கள் சவால் விடுத்துள்ளனர்.

உஷார் மீண்டும் ஓட்டுவீர்!

(பொள்ளாச்சி—அ. ச. பாலு)

1. ஓட்டுவோம் வெளியிலே!
ஊழல் பேர்வழிகளை!!
நாட்டு மக்கள் வாழ்வையே
நாசம் செய்த நபர்களை! (ஓ)

2. மாட்டுப் பெட்டி தன்னிலே
மண்ணைப் போட்டீர் முன்னரே
ஓட்டுக் கேட்க வருகிறார்!
உஷார்! மீண்டும் ஓட்டுவீர்!! (ஓ)

3. சட்ட சபை ஜோடியாய்
தயார் செய்த மாடுகள்!
ஒற்றை மாடாய் விட்டது!
ஊரில் மானம் கெட்டது!! (ஓ)

4. மட்டில்லாத வரிகளை
மக்கள்மீது போட்டவர்!
கஷ்டம் நீக்குவீர் எனில்
கடவுள் பஜனை செய்கிறார் (ஓ)

5. உரிமை கேட்டு நின்றிடில்
உணவுப் பஞ்சம் என்றிடில்;
'வெறியர் போல' மக்களை
வேட்டையாடும் சூரர்கள்! (ஓ)

6. அமைதியில்லை நாட்டிலே
அவர்கள் ஆண்ட பாட்டிலே
இமியும் நன்மை இல்லையே!
என்றும் காங்கிரஸ் தொல்லையே!
(ஓ)

கொரியப் பிரச்னை பற்றி ஹேஷ்யம்

ஐ. நா. செப். 13—

இம்மாதக் கடைசி வாரத்தில் பீகிங்கில் நடைபெறும் சமாதான மகாநாட்டில், கொரியப் பிரச்னையையும், இதர தூரக்கிழக்கு நாடுகளின் பிரச்னைகளையும் தீர்க்க, சோவியத் யூனியனும், மக்கள் சீனாவும் புதிய பிரேரணைகளை வெளியிடலாம் என்று ஐ. நா. வட்டாரங்களில் ஹேஷ்யங்கள் கிளம்பியிருக்கின்றன. பி. டி. ஐ.

ஆமதாபாத் தமிழ் [illegible] வித்யாலயம்

ஆமதாபாத், செப். 8—

ஆமதாபாத், மணி நகரிலுள்ள மேற்கண்ட வித்யாலய வருடாந்தர ஜெனரல் பாடிக் கூட்டம் செப். 7-ம் தேதி கூடியது. சென்ற வருட அறிக்கையும், வரவு செலவு கணக்கும் வாசிக்கப்பட்டது.

ஆமதாபாத் தமிழ் மக்களின் கல்வி வசதிக்காக மனை, கட்டிடம், வாசகசாலை ரூ. 52,789-8-0 செலவில் நிறுவப்பட்டுள்ளது. குழந்தைகள் கல்விவசதிக்காக மாதாமாதம் ஆசிரியர் சம்பளம் ரூ. 40 கொடுக்கப்படுகிறது. 4 டிவிஷன்களில் தமிழ் பத்திரிகைகள் இலவசமாகப் போடப்பட்டு வருகின்றன. வாசகசாலையில் 2,000 தமிழ்ப் புத்தகங்கள் உள்ளன. (ந.—தி.)

மக்கள் மன்றம்

கூட்டுறவு ஸ்தாபனங்களில் ஊழல்

திருப்பத்தூர் கோவாப்ரேடிவ் ஸ்டோர் கிளை கண்டரமாணிக்கத்திலுள்ளது. அதன் பொறுப்பில் நடந்து வரும் நிவாரணக் கடையில் பொது மக்களுக்கு விநியோகிக்க வரும் சோள மூடைகளை சில்லரையாக விற்பனை செய்யாது மூடைக்கணக்காய் இங்குள்ள சில்லரை வியாபாரிகளுக்கு 22-8-52ல் மூடை 1க்கு ரூ. 28-0-0 விலையாக இங்குள்ள ஸ்டோர் மானேஜர் பி. ஆர். குப்புச்சாமி கொடுத்தார். சர்க்காரால் நிர்ணயிக்கப்பட்ட விலை மூடை 1க்கு 25-8-0 தான். இது விபரத்தை பொறுப்புள்ளவர் என்ற முறையில் ஸ்டோர் ஸ்பெஷல் ஆபீசருக்கு பொது ஜன மகஜர் மூலம் தெரியப்படுத்தினோம். பெற்றுக் கொண்டும் மீண்டும் கூட்டு கொள்ளை நடத்த திட்டமிட்டு இருப்பு இருக்கும் சோள மூடைகளில் 15-ஐ விற்பனை செய்யக்கூடாது. எஸ். எஸ். கோட்டைக்கு அனுப்பவேண்டுமென்று மறுத்துவிட்டார். பொது ஜன நிர்பந்தத்தின் பேரில் 5-9-52 வெள்ளிக் கிழமையன்று கடை திறந்து விற்க வேண்டிய நிலை ஏற்பட்டது. இதன் மூலம் இவர்கள் பதுக்கல் அம்பலமாயிற்று.

இதேபோல் பல சரக்கு செக்ஷனிலும், ஜவுளி செக்ஷனிலும் பல சாமான்களின் விலையை நிர்ணயிக்கப்பட்ட விலைக்குமேல் அதிக ரேட்டுக்கு விற்பனை செய்ததாகவும், பில்களை திருத்தி கையாடல் செய்ததாகவும் இன்னும் பல சுரண்டல்கள் இங்குள்ள மானேஜர் செய்ததாக ஸ்டோர் சிப்பந்திகளில் மூவர் தக்க ஆதாரங்களுடன் கை எழுத்திட்டு சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு 26-8-52லும், 31-8-52லும் புகார் செய்திருக்கிறார்கள். அதை விசாரிக்க வந்த ஸ்பெஷல் ஆபீஸரும், ஆடிட்டரும் சரியான முறையில் விசாரியாமல் பின்னால் வருகிறோமென்றுபோனவர்கள் இன்று வரை வரவில்லை. இதன போக்கு பொதுஜனங்களிடையே அதிருப்தியை வளர்ப்பதுடன இங்குள்ள மானேஜர் புரியும் கையாடல்களில் ஸ்பெஷல் ஆபீசருக்கும் பங்குண்டு எனத் தெரிகிறது.

இத்தகைய கூட்டுறவு ஸ்தாபனங்களில் நடக்கும் ஊழல்களையேனும் ராஜாஜீ சர்க்கார் முன் வந்து தடுக்கப் போகிறதா? அல்லது கள்ள மார்க்கெட்டையும் லஞ்சத்தை யும் வளர விட்டு பொது மக்களின நலனை புறக்கணிக்கப் போகிறதா?

இதுதான் இன்று மலிவு தானியக் கடையை நம்பி வாழும் பெரும்பாலான மக்களின் முன உள்ள கேள்வியாகும்.

காரியதரிசி
வெ. இராமசாமி
9-9-52 கண்டரமாணிக்கம்

இராமேஸ்வரம் தீவில் கொடிய பஞ்சம்

ஐயா,

சுற்றிலும் கடல் சூழ்ந்த மணற்பாங்கான இந்தத் தீவில் எவ்விதமான நன்செய் அல்லது புன்செய் விவசாயத்திற்கோ வசதி கிடையாது. இங்கே விவசாயம் எனக்கருதப்படும் தென்னை, பனை, இவைகளும் கடந்த நான்கு, ஐந்து வருடங்களாகத் தகுந்த மழையில்லாமல் அவைகளும் பாதிக்கப்பட்டிருக்கிறது. இந்த தீவில் பெரும்பாலான வர்கள் இந்தத் துறைமுகத் தொழிலில் ஈடுபட்டு அதையே நம்பி வாழ்ந்தவர்கள். கடந்த யுத்த காலத்திலிருந்து துறைமுகத்தில் மரக்கலங்கள் போக்குவரத்து தடைபட்டு விட்டதனல் [illegible]தொழிலில் ஈடுபட்ட[illegible]ம வேறு [illegible] மிகவும் [illegible] குறைவாகயிருப்பதால் அவர்களும் மிகவும் கஷ்டத்துடன் தான் ஜீவனம் செய்து வருகிறார்கள். இந்த நிலைமையில் ரேஷன் நீக்கத்திற்குப் பிறகு இங்கு ஒரு படி அரிசி ரூ. 1-6-0 ஆக விற்கிறது. ஏற்கனேவே பிழைப்பில்லாமல் வறுமைப்பட்டிருக்கும் ஜனங்கள் இவ்வளவு அதிக விலை கொடுத்து அரிசிவாங்க முடியாமல் மிகவும் தவிக்கிறார்கள். பசியின் கொடுமையால் கண்ட உணவுகளை உட்கொண்டு ஆரோக்யம் பாதிக்கப்பட்டு தொத்து நோய்கட்கு ஆளாக நேரிடும் என அஞ்சுகிறோம். ஆகையால் இந்தத் தடவை (இராமேஸ்வரம், பாம்பன், தங்கச்சிமடம், தனுஷ்கோடி) பஞ்சப் பிரதேசம் போல் கருதி 12 அவுன்ஸ் அரிசியாவது உடனடியாக ரேஷன் கடைகள் மூலம் விநியோகம் செய்யவும், வேலையில்லாதவர்கட்கு இதர தொழில் வளர்ச்சிக்கான ஏற்பாடுகளும் செய்து கொடுக்க வேண்டுமாய் கேட்டுக்கொள்கிறேன்.

பாம்பன் 8-9-'52. | எம். செய்யது இப்ராஹிம்

ஆஸ்பத்திரியின் அலங்கோலம்!

திருத்துரைப்பூண்டி கவர்மெண்டு ஆஸ்பத்திரிக்கு வேதாரண்யம் பகுதியில் உள்ள நமது தோழர் காத்தமுத்து எதிரிகளால் தாக்கப்பட்டு ஆஸ்பத்திரியில் சிகிச்சைக்குச் சேர்க்கப்பட்டிருக்கிறார் என்பதை கேள்விபட்டு மன்னார்குடி தொகுதி எம்.எல். ஏ. ஏ. கே. சுப்பையா. தாலுக்காவின் கம்யூனிஸ்ட் கட்சி காரியதரிசி பி. எஸ். சுப்ரமண்யம், பி. என். கணேசன் (த. நா. வி. ச. செயற்குழு அங்கத்தினர்) முதலியோர் சென்றனர். வியாதியஸ்தர்கள் கீழே பாய் விரிப்பில் படுத்திருந்தார்கள். காயப்படுத்தப்பட்டு கீழே படுக்கமுடியாதநிலையிலுள்ள நமது தோழர் கூட அங்கு படுக்கை 2 காலி இருந்தும் கீழே கஷ்டத்துடன் படுத்திருக்கிறார். டாக்டரிடம் எம். எல். ஏ. யை அறிமுகப் படுத்தியும் ஒன்றும் பதில் கூறவில்லை. டாக்டர் வரும் வியாதியஸ்தரை படுக்கைக் கொண்டுவரும்படிசொல்கிறார் ஆஸ்பத்திரிக்கு போதிய இடம் இடையாது. இடம் விஸ்தரிக்க வேண்டும். விஸ்தரிப்புக்கு இடம் தஞ்சை ஜில்லா போர்டு தலைவர் நாடிமுத்துப் பிள்ளை கொடுத்தால் தான் விஸ்தரிப்பு செய்ய முடியும். அவர் பக்கத்தில் நிலத்தை (புஞ்சை தரிசு) வீணாகப் போட்டு வைத்திருக்கிறார். அந்த இடத்தை ஜில்லா கலெக்டர், டி. எம். ஓ. முதலியவர்கள் பார்வையிட்டு சென்றிருக்கிறார்களாம். அதிகாரிகள் அவர் நிலத்தை குறிப்பிட்டு எழுதபயப்படுகிறார்கள். தங்களுக்கு வேறு இடம் மாற்றப்படும் என்று. ஆட்சியினர் திருத்துரைப்பூண்டி ஆஸ்பத்திரிக்கு 12 படுக்கை அதிகப்படுத்தியும் கட்டிட இடம் வசதியாக இல்லை. பிரேத பரிசோதனை இடமும் அதற்குள் தான் இருக்கிறது. அநேகமாக ஆஸ்பத்திரிகளில் ஏழை மக்கள் சரியாக கவனிக்கப்படுவதில்லை. இதை ஆட்சியினர் அவசியம் கவனித்து டாக்டர்களுக்கு சரியாக எச்சரிக்க வேண்டும். முக்கியம் திருத்துறைப்பூண்டி ஆஸ்பத்திரி கட்டிடம் அதிகரிப்பு செய்து மெயின் ரோடில் ஆஸ்பத்திரி வழி இருக்க செய்யவேணடும்.

11-9-53 பி. கணேசன்
திருத்துரைப்பூண்டி

நடக்கவிருப்பவை

சென்னை, திருவல்லிக்கேணி மல்லன் பொன்னப்ப முதலி தெருவில் 15-9-52 மாலை 6 மணிக்கு ஸ்ரீ. நடராஜா கல்விக் கழகத்தில் ஆசிரியர் மறைமலை அடிகளார் படத் திறப்புவிழா தமிழ் பெரியார் திரு. வி. க. அவர்களின் தலைமையில் நடைபெறும். திரு. [illegible]ராயண துரைக்கண்ணன் [illegible]ரிய பிரசண்ட விகடன்) [illegible]த்தை திறந்து வைப்பார். [illegible] மாணிக்கம் [illegible] பேசுவார்.

விவசாயிகள் சங்கப் பொதுக்கூட்டங்கள்

மன்னார்குடி, செப் 12—

9-9-52 இரவு 7 மணிக்கு வடபாதிமங்கலம் கிராமத்தில் விவசாய சங்கப் பொதுக் கூட்டம் நடைபெற்றது. ஏறக்குறைய 7000 மக்கள் திரண்டிருந்தனர்.

திருத்துரைபூண்டி தோழர் கணேசன் தலைமை தாங்கு கிறார்.

தோழர் பி. வெங்கடேசன் எம். எல். ஏ., தோழர் ஏ. கே. சுப்பையா எம். எல். ஏ., ஆகியோர் 'தற்கால அரசியல் நிலை' 'தஞ்சாவூர் வார குத்தகைதார்-பண்ணையாள் பாதுகாப்பு அவசரச் சட்டம்' பற்றி விரிவாகப் பேசினார்கள்.

8-9-52 இரவு 7 மணிக்கு குடிதாங்கிச் சேரியில் விவசாயசங்கப் பொதுக்கூட்டம் தோழர் களப்பாள் குப்புசாமி மைதானத்தில் நடைபெற்றது. 2000 மக்கள் கூடினர்.

தோழர்கள் பெரிய குப்புசாமி தலைமை தாங்கினர்.

தோழர் பி. வெங்கடேசன் எம். எல். ஏ., ஏ. கே. சுப்பையா எம். எல். ஏ., எஸ். காசிநாதன். முதலியோர், 'விவசாய சங்கத்தின் அவசியம்' 'அவசரச் சட்டமும் அதன் குறைபாடுகளும்' 'தற்கால அரசியல் நிலை' பற்றி பேசினார்கள்.

மாயவரம், செப். 12—

மாயவரம் தாலுக்கா பட்டவர்த்தியில் 10-9-52 புதன் மாலை 6-மணிக்கு விவசாயிகள்சங்க பொதுக்கூட்டம் தோழர் எஸ் ராஜாங்கம் தலைமையில் நடைபெற்றது. அது சமயம் தோழர் கிடங்கல் ஆர். சம்பந்தம் பி.ஏ., எம். எல். ஏ., ஏ. வேலு எம்.எல்.ஏ. தஞ்சை ஜில்லா கம்யூனிஸ்ட் கட்சி காரியதரிசி தோழர் எம். காத்தமுத்து, சீர்காழி தாலுக்கா விவசாயிகள் சங்க காரியதரிசி தோழர் கே. எஸ். அண்ணங்கார் அவர்களும் விவசாயிகள் பாதுகாப்பு அவசர சட்டமும் மக்கள் கடமையும் அதிலுள்ள திருத்தங்கள் என்பதைப் பற்றியும் விரிவாகப் பேசினார்கள். சுமார் 6000க்கு மேற்பட்ட விவசாயிகளும், தொழிலாளிகளும்கூடியிருந்தனர். 1000க்குமேற்பட்ட தாய்மார்களும் கூடியிருந்தனர்.

கூட்டம் 9-30 மணிக்கு முடிவடைந்து திருவாரூர் டேனியல் பார்ட்டியாரால், புதுமை குறவன் குறத்தி நாடகம் தொடர்ந்து நடந்து இரவு 2 மணிக்கு முடிவடைந்தது. (ந. கி.)

காங்கிரஸ் சட்டதிட்ட திருத்தங்கள்

இந்தூர், செப். 13—

காங்கிரஸ் சட்ட திட்டங்களுக்குக் கொண்டுவரப்பட்ட திருத்தங்களை யெல்லாம் காரியக் கமிட்டி விவாதித்து முடிவு செய்துவிட்டது. எந்த காங்கிரஸ் கமிட்டியின் தலைவரோ, காரியதரிசியோ இரண்டு வருடம் தொடர்ந்து பதவி வகிக்கக் கூடாதென்று தாங்களே பிரேரேபித்திருந்த ஒரு திருத்தத்தை காரியக் கமிட்டி வாபஸ் வாங்கிக் கொண்டுவிட்டது. ஆகவே இன்றுள்ள நிலைமையை நீடிக்கும்.

பார்லிமெண்டுகளிலும், சட்டசபைகளிலுமுள்ள காங்கிரஸ் மெம்பர்கள், அந்தந்தப் பிரதேசத்திலுள்ள காங்கிரஸ் கமிட்டிகளில் (ஓட்டில்லாத), அஸோஸியேட், (துணை) மெம்பர்களாக இருப்பர் என்ற புதிய திருத்தத்தை காரியக் கமிட்டி நிறைவேற்றியது

ஜவஹர் வாலிபர் சங்கம்

எமனேஸ்வரம், செப். 11—

7-9-52ந் தேதி இரவு 7 மணிக்கு சங்க மகாசபைக் கூட்டம் ஸ்ரீ கே. ஜி கிருஷ்ணய்யர் தலைமையில் கூடி அடியிற்கண்ட தீர்மானங்களை ஏகமனதாக நிறைவேற்றியது.

தீர்மானங்கள்: ஏற்கனவே சரியாக வேலையில்லாமலும், நெய்த துணி விற்பனையாகாமலும் அல்லற்படும் நெசவாளர்களுக்கு மத்திய சர்க்கார் தொழில் மந்திரி டி. டி. கிருஷ்ணமாச்சாரி விடுத்த அறிக்கை வெந்த புண்ணில் வேல் கொண்டு குத்துவதுபோலிருக்கிறது. நெசவுத் தொழிலாளர்களைக் காப்பாற்ற எண்ணமிருந்தால் நெசவாளர்களுக்கு பாதுகாப்பளித்து வேஷ்டி, சேலை ரகங்களை மில்லில் தயார் செய்யாமல் கைத்தறிக்கே ஒதுக்க வேண்டும்.

எமனேஸ்வரம் பஞ்சாயத்துப் போர்டில் அதிகம் வாக்காளர்கள் உள்ள 3, 4, 5, ஆகிய வார்டுகளை இரண்டு இரண்டு வார்டுகளாக பிரிக்க வேண்டுமென்று சம்பந்தப்பட்ட அதிகாரிகளைக் கேட்டுக் கொள்வதென்று முடிவு செய்யப்பட்[illegible]. (ந-கி)

நகர சபை தேர்தலிலும் கையில் மை பூசப்படும்

சென்னை, செப். 12—

நகரசபைத்தேர்தலில் ஆள் மாறாட்டத்தைத் தடுப்பதற்காக, வோட்டுப்போடும் வாக்காளரின் கையில் மை பூசப்படும் என்று சென்னை நகர சபைக் கமிஷனர் நேற்று அறிவித்தார். இது விஷயமாக முன்னர் சர்க்கார் வெளியிட்ட உத்திரவு வாபஸ் பெறப்பட்டது.

தேர்தல்காலை 7 மணிமுதல் நடு[illegible] வரையிலும், பிறகு [illegible] ஒருமணி முதல் மாலை [illegible] வரை நடைபெறும் [illegible] அறிவிக்கப்பட்டது. [illegible] தேர்தல்களின் [illegible] கையில் [illegible]

ஆட்குறைப்புசெய்த 179 பேருக்கு [illegible] நிவாரணம் அளிக்க வேண்டும் [illegible] தகராறில் [illegible] தீர்ப்பு

[illegible]களூர், செப், 11—

[illegible]போகும் 179 கம்பளி [illegible] வருஷத்திற்கு 1 மாத [illegible] ஒவ்வொரு தொழிலாளிக்கும் [illegible] மோட்டன், அன்சில்க் மில் நிர்வா[illegible] நிவாரணம் கொடுக்க வேண்டுமென்று தொழி[illegible] அப்பீல் நீதிமன்றம் அளித்த திர்ப்பை [illegible] உயர்நீதிமன்றம் உர்ஜிதம் செய்தது.

மைசூர் உயர்நீதிமன்ற பிரதம நீதிபதி பி. மேடப்பாவும் நீதிப[illegible] வாசுதேவமூர்த்தியும் [illegible] அளித்தனர். பங்களூர் [illegible], காட்டன், சில்க் மில் நிர்வாகம் இந்திய அரசியல் சட்டம் 226-வது பிரிவின் படி 14-3-52-ல் தொழிலாளர் அப்பீல் நீதிமன்றத்தின் திர்ப்பிற்கு விரோதமாக அப்பீல் செய்தனர்.

விசாரணை நடந்து கொண்டிருக்கும்போதே நிர்வாகம் 179 பேர்களை ஆட்குறைப்பு செய்ய [illegible] அனுமதிகோரியது. நீதிமன்[illegible] விசாரணை செய்து மேற்[illegible] 14-3-52-ல் திர்ப்[illegible] [illegible]த் தீர்ப்பை ரத்து [illegible] வேண்டுமென்று [illegible] உயர்நீதி மன்றத்[illegible] அப்பீல் செய்தது.

முதலில் தொழில் நீதி மன்றம் வழக்கை விசாரித்து கம்பளி இலாகாவில் உள்ள 179 தொழிலாளிகளை ஆட்குறைப்[illegible] [illegible] நிர்வாகத்திற்கு [illegible]

[illegible]தொழிலாளர் சங்கம் ஆட்குறைப்பை அனுமதிக்கும் உத்தரவை பூரணமாக ரத்து செய்ய வேண்டுமென்று மனு செய்து கொண்டது.

நீதிபதிகள் தீர்ப்பில், [illegible]

ஸ்ரீகாகுளம் ஜில்லாவில் ப[illegible]

முதல் மந்திரியிடம், எம்.எல்.ஏ., [illegible]

சென்னை, செப். 13—

திரு. ஜி. லட்சண்ணா, எம்.எல்.ஏ.யும் திரு. ராஜகோபாலராவ, எம்.பி. (ஸ்ரீகாகுளம்) ஆகியோர் முதன மந்திரி சி. ராஜகோபாலாச்சாரியாரையும் உணவு மந்திரி சி. சுப்ரமண்யத்தையும் சந்தித்து, ஸ்ரீகாகுளம் ஜில்லாவில் இவ்வாண்டு விளைவின்மையால் ஏற்பட்டுள்ள மோசமான உணவு நிலைமையை எடுத்துக் கூறினர்கள். டி ஜில்லாவில் ஏற்படவிருக்கும் பஞ்சத்தைத் தடுத்து நிறுத்துவதற்காக அரசாங்கம் அவசியமான நிவாரண நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டுமென்றும், கேட்டுக் கொண்டார்கள்.

இதற்கு முன்பாக, திரு. கோத்தகிரி சீதாராமஸ்வாமி (ஸ்ரீகாகுளம் ஜில்லா காங்கிரஸ் கமிட்டித் தலைவர்) தலைமையில் திரு. எல். எல். தாஸ் எம். எல். ஏ., திரு. எச். எச். யோரா எம்.எல்.ஏ. ஆகியோர் [illegible]

[illegible] இராமநாதபு[illegible] நீதி, நிர்வாக[illegible] பட்ட ஜில்லாக்களில் இ[illegible] நாதபுரம் ஒன்று. உள்ளூரில் ஒரு சப். மே. கோர்ட்டும், சப். டி. மேஜிஸ்டிரேட் கோர்ட்டும் இருக்கிறது.

கட்சிக்காரர்கள் நகல்கள் பெறுவதற்காக காப்பிக் காகிதங்கள் வாங்கிக் கொடுத்தால் நகல் எழுதிய து போக மீதிப்பட்ட காகிதங்கள் (0-5-0) திரும்ப கட்சிக்காரர்களுக்குக் கிடைப்பதில்லை. நகலுக்கு மனுப் போடுபவர்கள் ஏதாவது ஒன்றுக்கு மனுப்போட்டால் வேறொன்றுக்கு நகல் எழுதிக் கொடுக்கப்படுகிறது.

சட்டப்படி பக்கம் ஒன்றுக்கு 17[illegible] வார்த்தைகள் ஒரு பக்[illegible] எழுத வேண்டியதி[illegible]

[illegible]

5 வல்ல[illegible] டில்

பஞ்சாபெங்கும் வரிகளை எதிர்த்து ஹர்த்தால்

வியாபார ஸ்தம்பிப்பு; மோட்டார் முதலாளிகள் வேலைநிறுத்தம்

கோரிக்கைகளை கவனிக்க மந்திரி மறுப்பு

டெல்லி, செப். 12— சிம்லா, அம்பாலா, அமிர்தசரஸ், இன்னும் மற்ற பஞ்சாப் மாகாண நகரங்களில் வியாபாரம் பூரணமாக ஸ்தம்பித்தது. "பஞ்சாப் வியாபாரிகள் மண்டலி"யின் வேண்டுகோளுக்கிணங்க இன்று அனுஷ்டிக்கப்பட்ட ஹர்த்தாலில் [illegible] அடைக்கப்பட்டன.

மோட்டார்களால் சுமந்து செல்லப்படும் சாமான் மீது போடப்பட்டுள்ள வரியை எதிர்த்துவாடகை மோட்டார் சொந்தக்காரர்கள் ஏற்கனவே ராஜ்யத்தில் ஹர்த்தால் அனுஷ்டிக்கின்றனர்.

சிம்லாவில் காய்கறி சந்தையும் அடைத்துக் கிடந்தது. ராஜ்யத்தின் மற்றப் பகுதிகளிலிருந்து வந்துள்ள செய்திகள் கூறுவதாவது, அம்பாலாவில் வாடகை மோட்டார் சொந்தக்காரர்களும், வியாபாரிகளும் சர்க்கார் புதிய வரிகளை தளர்த்த வேண்டுமென்று கோரி கண்டன கூட்டங்கள் நடத்தினர். அமிர்தசரசில் வியாபார ஸ்தலங்களும், தொழிற்சாலைகளும், கடைகளும் அடைபட்டுக்கிடந்தன.

அமிர்தசரசுக்கு விஜயம் செய்துள்ள பஞ்சாப் ராஜ்ய சர்க்கார் நிதி மந்திரி சர்தார் உஜ்ஜயின் சிங் வியாபாரிகளின் ஹர்த்தாலை "அவசியமற்றது, நியாயமற்றது", என்று வருணித்தார்.

சர்க்காருக்கும் வியாபாரிகளுக்கும் பாதகம் விளைவிக்கக் கூடிய நேரடி நடவடிக்கையை வியாபாரிகள் கைவிடாவிட்டால் சர்க்கார் இவ்விஷயமாக பேச்சு வார்த்தையை தொடர்ந்து நடத்த தயாரில்லை என்று மந்திரி கூறினர்.

வள்ளுவர் கலைக் கழகம் ந. ம. கூ. அபேட்சகரை ஆதரித்து வேலை செய்வதென முடிவு

சென்னை, செப். 13— எழும்பூரிலுள்ள வள்ளுவர் கலைக்கழகத்தில் 9-9-52-ல் நடந்த நிர்வாகக் குழுக் கூட்டத்தில், 9-வது வட்டத்தில் [illegible] தேர்தலுக்கு [illegible] ந. ம. கூ. அபேட்சகர் திருவாளர் வி. முனிசாமி அவர்களை கழகத்தினரும் [illegible] ஒத்துழைப்பதென முடிவு செய்யப்பட்டது.

கொரியப் போர்

சியோல் செப். 13— மத்திய கொரியப் போர்முனையில் [illegible] குன்றிலிருந்து சீனப்படைகளை தென்கொரியப் படைகள் விரட்டியடித்ததாக ராய்ட்டர் செய்தி கூறுகிறது. கடுமையான சண்டை தொடர்ந்து நடக்கிறதாம்.

வேலைக்கு எடுத்துக் கொள்ள அதிகாரி தீர்ப்பு!

திருவையாறு, செப். 9— திருவையாற்றில் உள்ள [illegible] தேவகோட்டை, ஓ. ஆர். எம். எம். எஸ்.பி.எஸ்.எஸ்.எம். மெய்யப்பச் செட்டியாருக்குச் சொந்தமான [illegible] வேலை பார்த்து வந்த [illegible] தொழிலாளர்களை [illegible] வேலையிலிருந்து நீக்கினர். [illegible] லேபர் கமிஷனர் [illegible] திரவிட்டார்கள். தஞ்சை வக்கீல் ஆர். ரங்கனு தய்யங்கார் பி. எ. பி. எல். விண்ணப்பதாரருக்கும் தஞ்சை வக்கீல் ராமனுதய்யர் நிர்வாகியின் சார்பிலும் ஆஜரானுர்கள்.

இத்துடன் லேபர் கமிஷனரிடமிருந்து வந்த குறிப்பின் நகலையும் இணைத்திருக்கிறேன்,

தென்பகுதி ரயில்வேயில் வேறொரு போட்டி யூனியன் துவக்கம்

ஈ. வே. ரா.வின் பேச்சு

திருச்சி, செப். 11— நேற்று மாலை பெரியார் ஈ. வே. ராமசாமி நாயக்கர் தென்னாட்டு ரயில்வே தொழிலாளர் சங்கம் என்ற புதிய சங்கத்தை துவக்கி வைத்தார்.

ரயில்வேத் தொழிலாளர்களின் பொருளாதார, சமூக, கல்வி நலன்களைப் பாதுகாப்பதற்காக புதிய சங்கம் அமைக்கப்பட்டுள்ளதாக, இந்த சந்தர்ப்பத்தில் விடப்பட்டுள்ள அறிக்கை கூறுகிறது.

கம்யூனிஸ்டுகள் எப்படியோ தொழிற் சங்கங்களில் புகுந்து கொண்டு அவைகளின்மீது ஆதிக்கம் செலுத்துகின்றனர் என்று பெரியார் ஈ. வே. ரா. சங்கத்தை துவக்கிவைத்துப் பேசினர். தொழிலாளிகள் ஜாக்கிரதையாக இருக்க வேண்டுமென்றும், அவர்களுடைய மாய்மாலங்களைக் கண்டு ஏமாந்துவிடக்கூடாது என்றும் கூறினர்.

திரு. டி. பி. வேதாசலம் கூட்டத்திற்கு தலைமை வகித்தார்.

ஜப்பானிலுள்ள சோவியத் ராஜதந்திரிகள்

டோக்கியோ, செப். 12— ஜப்பானிலிருந்த ரஷ்ய ஸ்தானீகாலய அதிகாரிகள் 24 பேர்களும், ஜப்பானைவிட்டு வெகுவிரைவில் புறப்பட்டுச் செல்வார்கள்.

சோவியத் ராஜதந்திர தூதுகோஷ்டியினரை, ஜப்பானிய சர்க்கார் இதுவரை அங்கீகரிக்காமல் இருந்தது.

சோவியத்நாடு சென்று திரும்பிய வாலிபால் வீரர்கட்கு வரவேற்பு

சோவியத் நாட்டிற்கு வீரர் மாடசாமி புகழ்மாலை

சாத்தூர், செப்.10— சமீபத்தில் அகில உலக வாலிபால் விளையாட்டுப் போட்டியில் கலந்து கொண்டு இந்தியக் குழுவில் இடம் பெற்று, சோவியத் நாடு சென்று திரும்பிய வீரர்கள், திரு. மாடசாமி, சுலைமான் ஆகிய இருவரையும் சாத்தூர் எம்.எ.சிதம்பரநாடார் நினைவுக் கழகத்தினர் வரவேற்றனர். எட்வர்டு ஹைஸ்கூல் மைதானத்தில் கூட்டப்பெற்ற பொதுக்கூட்டத்தில் விளையாட்டு வீரர் திரு. மாடசாமி பேசியதாவது.

இந்தியக் குழுவில், சேர்ந்து சோவியத் நாடு செல்லும் வாய்ப்புக் கிடைத்ததற்கு மகிழ்கிறேன். இந்தியரை சோவியத் மக்கள் மிக்க அன்போடு உபசரிக்கிறார்கள். தினம் ஒன்றுக்கு எங்கள் ஒவ்வொருவருக்கும், இருக்கை, உணவு வசதிகட்காக சோவியத் சர்க்கார் ரூபாய் 285, செலவிட்டது, சில்லரைச் செலவுகட்காக தினமும் ரூபாய் 50 கொடுத்தார்கள். நெருக்கடி காலங்களில் மாஸ்கோ நகரம் முழுவதுமே பூமிக்குள் சென்று பாதாள நகரில் தங்கமுடியும். அங்குள்ள ஒரு மோட்டார் தொழிற்சாலையில் ஐந்து நிமிடங்களுக்கு ஒரு கார் உற்பத்தி யாகிறது. அங்குள்ள ஒரு சைக்கிள் தொழிற்சாலையில் ஒரு நாளைக்கு 1500 சைக்கிள் உற்பத்தியாகின்றன. ரூபாய் 1500க்கு குறைந்த மாத வருமானம் உள்ளவர்களைப் பார்க்க முடியாது. அங்கு பிச்சைக்காரர்களும் இடையாது. கிராமங்களைப் பார்த்தோம். ரஸ்[illegible] மின்சார வசதியில்லாத கி[illegible]மங்களே யில்லை. கிரா[illegible]கள் ஒவ்வொருவர் வீ[illegible] ஒரு ரேடியோவும், [illegible] வைத்திருக்கிறார்கள்.

ஸ்டாலின் பிறந்[illegible] தான் அங்கு கொ[illegible]படும், திரு நாட்களில் [illegible] மானது லெனின் உடல் [illegible]துக்கு இரு முறை மக்கள் [illegible] வைக்குத் திறந்து வைக்கப்படுகிறது, நாங்கள் போய்ப் பார்த்தோம். உடலில் கொஞ்சமும் மாற்றமின்றி உயிரோடு இருப்பதுபோலவே தோன்றுகிறது. லெனினைத் தரிசிக்க 4 மைல் 6 பர்லாங் நீளத்தில் மக்கள் இயூ வரிசையில் நின்றுகொண் [illegible]ருந்தார்கள். ஜார் காலத்திலிருந்து இன்றுவரை சரித்[illegible] சம்பவங்களை அங்குள்[illegible]த்திரிகர்கள் படம் வ[illegible] ஒரு கண்காட்சியில் [illegible]ருக்கிறார்கள். அது மிக[illegible]மாதமாக யிருக்கிறது. [illegible]

பூமிக்கடியில் [illegible] ரயிலுக்கு, ரயில் நிலையங்கள் ஒவ்வொன்றும் சுமார் 2 கோடி ரூபாய் செலவில் [illegible]டப்பட்டிருக்கின்றது. எழுத்துக்கள் தங்கத்தால் எழுதப்பட்டிருக்கின்றன. 36 மாடிகளை[illegible] கொண்ட ஒரு புதிய யூ[illegible] சிட்டி கட்டுகிறார்கள். அ[illegible] 5-வதுமாடியில் ஒரு பாட[illegible] நடக்கிறது. [illegible] கள் யாரும் இ[illegible] தானே [illegible] தோன்றுகி[illegible] கள் படிக்[illegible] தானே மறை[illegible] எங்கள் விளைய[illegible] 80,000 மக்க[illegible] தனர். ஒரு சந்த[illegible] நாங்கள் இரவு 11[illegible] பாதாள மாஸ்கோ[illegible]னேம். பகல் போல[illegible] தது. ஒழுங்கை நி[illegible] ஒரு போலீஸ் கூட[illegible] யாது. அங்[illegible] கத்தி[illegible]

பஞ்சத்தால் அவதியுறுகிறோம்

வரி வசூலை நிறுத்திவையுங்கள்

சுந்தரபாண்டியம் கைத்தறி நெசவாளர் கோரிக்கை

சென்னை முதலமைச்சர் ராஜாஜி கவனத்திற்கு

சுந்தரபாண்டியம் கிராமம் கைத்தறி நெசவுத்தொழிலாளர்கள் எழுதிக் கொண்ட மகஜர் பின்வருமாறு:

"எங்கள் கிராமம் இதுவரை மைனர் பஞ்சாயத்தாக இருந்து வந்தது. செப்டம்பர் மாததிலிருந்து மேஜர் பஞ்சாயத்தாக ஆகிவிட்டதென்று அறிவிக்கப்பட்டு மேஜர்பஞ்சாயத்து விதிகளின்படி ஒவ்வொரு குடியிருப்பு வீட்டிற்கும் அதன் விலை மதிப்பீட்டின்படி வரிவசூல் செய்யப்போவதாக தெரிகிறது.

கடந்த பல மாதங்களாக நெசவாளர்கள் வேலைக்கு போதுமான கூலி இல்லாமலும். உற்பத்தி செய்யப்பட்ட துணிகள் விற்பனையாகாமலும், மாதம் 1க்கு சுமார் 3 ரூபாயிலிருந்து 5 ரூ. தான் கூலி கிடைத்து வருகிறது. இந்த வருமானத்தைக் கொண்டு நெசவாளர்கள் காலங்கழிக்க முடியாமல் ஒவ்வொரு நாளும் பட்டினியாலும் பசியாலும், கஷ்டப்பட்டுக் கொண்டு தங்கள் வீடுகளையும் வீட்டிலுள்ள பாத்திரபண்டங்களையும், விற்றுவிட்டு வயிற்றுப் பிழைப்புக்காக அகதிகள் போல் வேலைதேடி வெளியூர் சென்று அவதியுற்றுக்கொண்டிருக்கிறார்கள் என்பது தங்களுக்கும் தங்கள் சர்க்காருக்கும் தெரியாததல்ல, இந்த நிலைமையில் வீட்டுவரி கொடுப்பதற்கு முடியாத நிலைமையில் இருக்கிறோம்.

ஆகையால் கைநெசவுத் தொழிலாளர்களாகிய எங்களிடமிருந்து வரிவசூல் செய்வதை நிறுத்தி (வரிவஜா) வைக்கும்படி கேட்டுக்கொள்கிறோம்."

தெ. ஆ. இனத்தகராறு பற்றி ஐ. நா. விவாதிக்கவேண்டும்!

13 ஆசிய நாடுகள் கோரிக்கை

ஐக்கிய நாடுகள், செப் 12— தென் ஆப்பிரிக்காவில், மலான் சர்க்காரின் நிறவெறிச் சட்டங்களால் ஏற்பட்டுள்ள இனத்தகராறு பிரச்னையை ஐ. நா. பொது அசெம்பிளி விவாதிக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்வதென 13 அரபு ஆசிய நாடுகள் தீர்மானித்திருக்கின்றன. இவ்வாறு கேட்டுக்கொண்டு ஐ. நா. பொதுக்காரியதரிசி திரு.லீக்கு ஒரு கடிதம் தயாரிக்கப்பட்டது

எதியோப்பியாவும், லைபீரியாவும் டி வேண்டுகோளில் கையெழுத்திடா விட்டாலும் கோரிக்கைக்கு தங்களுடைய ஆதரவைப் பின்னர் தெரிவிப்பார்கள்.

தெ. ஆ. அரசாங்கத்தின் நிறவெறி சட்டங்கள் ஐ. நா. வின் கருத்துக்களுக்கு எதிரானவை என்பது மட்டுமல்லாமல் உலக அபிப்பிராயத்திற்கே விரோதமானதாக இருக்கிறது என கூட்டத்தில் எடுத்துரைக்கப்பட்டது.

ஐக்கிய முன்னணி கூட்டம்

சேந்தமங்கலம், செப். 11— நாமக்கல் தாலுக்கா சேந்தமங்கலம் ஐக்கிய முன்னணியின் சார்பில் 10-9-52 புதன் மாலை 6 மணிக்கு ராமநாதபுரம் புதூர் ராமசாமி தலைமையில் ஒரு பொதுக்கூட்டம் நடைபெற்றது,

தோழர்கள் சேந்தமங்கலம் முத்துசாமி, டாக்டர் ஏ. மாணிக்கம், பழனிமுத்து, கே. வி. ராமசாமி எம்.எல்.ஏ., எம் அருள்மணி, வே. பழனிசாமி ஆகியோர் காங்கிரஸின் ஊழல்களையும் அதன் காரணங்களையும் தெளிவாக விளக்கிப் பேசினார்கள். அந்நிய மூலதனம் பறிமுதல் செய்யப்பட்டு காபி, டீ, தோட்டங்களுக்கு அதிக வரி விதித்து 30 ரூபாய்க்கு குறைந்த நிலவரியை ரத்து செய்ய வேண்டும் என்றும்,பஸ்வரி,நில அபிவிருத்திவரி ஆகியவற்றைக் கண்டித்தும் தோழர் கே. வி. ராமசாமி எம். எல். ஏ. பேசினர். ஐ. மு.வை பலப்படுத்த வேண்டுமென்றும் கேட்டுக் கொண்டார்.

தடுப்புக்காவல் சட்டத்தை ரத்து செய்ய வேண்டுமென்றும், எல்லா அரசியல் கைதிகளையும் விடுதலை செய்து சதிவழக்குகளை வாபஸ் வாங்க வேண்டுமென்றும், பஸ் வரி, நில அபிவிருத்தி வரிகளைக் கண்டித்தும் தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

தானியம் கள்ளக் கடத்தலா?

கட்டுப்பாடி, செப். 11— தாராபடவேடு, கோவாப் ரேடிவ் சொசை[illegible] நூற்றுக் கணக்கான [illegible] மூட்டைகள் இருந்து[illegible] யில் இக் கிராம[illegible] நேரம் [illegible]

தொழில் நீதிமன்றத் தீர்ப்பு குப்பைத்தொட்டியில்!

60 நீக்கப்பட்ட தொழிலாளிகளை வேலைக்கு எடுக்கமுடியாதாம்!

சிடி டிரான்ஸ்போர்ட் நிர்வாகத்தின் திமிருக்கு கண்டனம்

கோவை, செப். 12— 1952ம் வருடம் செப்டம்பர் 9ந்தேதி கோவை ஜில்லா மோட்டார் தொழிலாளர் சங்கத்தின சார்பில் சத்தியமங்கலத்தில் அஷ்டலக்ஷ்மி கோவில் மைதானத்தில் தோழர் பி. எஸ். பழனியப்பன அவர்கள் தலைமையில் ஓர் பொதுக்கூட்டம் நடைபெற்றது. அதுசமயம் கீழ்க்கண்ட தீர்மானங்கள் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டது.

1. நமது இந்திய தேசத்தின் அரசியல் சட்டத்தில் சங்கம் சேரும் உரிமை வரையறுத்துக் கூறப்பட்டிருந்தும்கூடச் சங்கத்தில் சேர்ந்த காரணத்திற்காக 60-க்கு மேற்பட்ட தோழர்கள் வேலையிலிருந்து சிடி டிரான்ஸ்போர்ட் நிர்வாகம் நீக்கியதையும்; அவர்களை வேலைக்கெடுத்துக்கொள்ள வேண்டுமென்று தொழில் கோர்ட்டிலும், அப்பீல் தொழில் கோர்ட்டிலும் தீர்ப்புக்கூறியும்கூட இன்னும் அவர்களை வேலைக்கெடுக்காமலிருப்பதைப் பற்றியும் அவர்களுக்கு கிடைக்கவேண்டிய பாக்கி சம்பளத்தை நாளதுவரை கொடுக்காமலிருப்பதைப் பற்றியும் இக்கூட்டம் மேற்படி நிர்வாகத்தை வன்மையாகக் கண்டிப்பதுடன், இதில் அரசாங்கம்உடனடியாக தலையிட்டு தொழிலாளர்களை வேலைக்கெடுக்கவும் அவர்களுக்கு கிடைக்கவேண்டிய பாக்கிச் சம்பளங்கள் கிடைக்கவும் ஆவன செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்ளுகிறது.

2) பி. எம். எஸ். கம்பெனியில் வேலைக்கெடுக்காத தோழர்கள் முத்துசௌந்தரராஜு, தேவதாஸ், தங்கராஜு, ஆகியவர்களை உடனடியாக வேலைக்கெடுக்கும்படி இக்கூட்டம பி. எம். எஸ். மேனேஜ்மெண்டாரைக் கேட்டுக் கொள்ளுகிறது.

பத்திரிகை காகிதக் கட்டுப்பாடு நீக்கத்திற்கு கண்டனம்

பூனா, செப். 11— "மத்திய சர்க்கார் பத்திரிகைக் காகிதத்தின் மீதுள்ள கட்டுப்பாட்டை நீக்கி விட்டதின் காரணமாக" கழுத்தறுப்பு போட்டிக்கு "வழி திறந்து விடப்பட்டுள்ளது; பெரிய பத்திரிகைகள் அதிக பக்கங்களை போட்டு விலையை குறைக்கும். இதன் மூலம் ஜில்லா, பிரதேச தினசரி பத்திரிகைகளுக்கு பாதகம் ஏற்படும்," என்று இந்திய மொழி செய்தி பத்திரிகைகள் சங்கத்தின் தலைவர் திரு. எ. ஆர். பட் இன்று கூறினர்.

ரஷ்யாவிலுள்ள மதஸ்தாபனங்களின் வளர்ச்சிக்கு எவ்வித தடையுமில்லை

பிரிட்டிஷ்காரர் கருத்து

லண்டன், செப். 11— ரஷ்யாவில் கிறிஸ்தவ மதஸ்தாபனத்களின் வளர்ச்சிக்கு எவ்விதத் தடையுமில்லையென்றும் அவற்றில் அங்கத்தினர்கள் நிறைய இருப்பதாகவும் டாக்டர் ஹக்பாக்னர் என்பவர் "பிரிட்டிஷ் வீக்லி"யில் எழுதியிருக்கிறார். டாக்டர் பாக்னரும் மற்றும் நட்புறவுக் கழகமொன்றின் இதர 13 அங்கத்தினர்களும் சென்ற ஜுலையில் சோவியத் சமர்தானக் கமிட்டியினால் அழைக்கப்பட்டிருந்தார்கள், இவர்கள் 3 வாரங்கள் ரஷ்யாவில் சுற்றுப் பிரயாணம் செய்தார்கள்.

ரஷ்யாவில் வாழ்வு நல்லமுறையில் அமைந்திருப்பதாகவும் அவர் கூறினர்.

"முஸ்லிம் என்பதற்காக நைஜாமின் கொடுங்கோலை நாங்கள் ஆதரிக்கவில்லை"

—ஷேக் அப்துல்லா

இந்தூர், செப். 12— சுபாஷ் சவுக்கத்தில் நடந்த ஒரு பொதுக் கூட்டத்தில் பேசும்போது காஷ்மீரின பிரதமர் ஷேக் அப்துல்லா, "ஹைதராபாத்தில் நைஜாமின் ஆட்சி நீடிக்க காஷ்மீர் மக்கள் என்றைக்கும் விரும்பியதில்லை" என்றார்.

சென்ற பதினைந்து வருடமாக எதேச்சாதிகார ஆட்சிகளை எதிர்த்து காஷ்மீர் மக்கள் போராடினர். இன்று காஷ்மீரில் ராஜ பரம்பரையை ஒழிக்க வேண்டுமென்று காஷ்மீர் மக்கள் ஒழிக்க முடிவு கட்டியது மதத் துவேஷத்தால் தூண்டப் பட்டதால் அல்லது. வறியோருக்கும் வாய்ப்புக்காரர்களுக்கு மிடையே அங்கு நடந்த போராட்டத்தின் உயர்ந்த எல்லையே அந்த முடிவு. எனவே ராஜ வம்ஸத்தை ஒழித்த காஷ்மீர் மக்கள் முஸ்லிம் அரசனுக உள்ள காரணத்தால் மற்றெந்த ராஜ்யத்திலும் முஸ்லிம் அரசர்களின கொடுங்கோலாட்சியை காஷ்மீர் மக்கள் ஆதரிப்பார்களென்று நினைப்பது அந்தப் பயித்தியக்காரத்தனம் என்றார்.

தேர்தல் கூட்டம்

விருதுநகர், செப் 11— 10-9-52 இரவு 7-30 மணிக்கு விருதுநகரில் முத்துராமபட்டி 24 வது வார்டில், தேர்தல் பொதுக்கூட்டம் கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பாக நடந்தது. கூட்டத்தில் தோழர் பரிபேக் மாரியப்பா பேசுகையில் 45 ஆயிரம் மக்கள் வசிக்கும் நம்நகரில், விரல் விட்டு எண்ணக்கூடிய சில முதலாளிகள் முனிசிபாலிடியை தங்கள் கைக்குள் எப்படி வைத்திருக்கிறார்கள், ஓட்டுக்கு ரூபாய் கொடுத்து மக்களின் உரிமையை விலைக்கு வாங்கி தங்கள் ஆதிக்கத்தை நிலைநாட்ட அவர்கள் இடும் திட்டங்களை நாம் முறியடிக்க வேண்டும், தோல்வியடைந்த காங்கிரஸ் முதலாளிகளுக்கும் நன்றாக பாடம் கற்பிக்க வேண்டும் என்று விவரித்து கம்யூனிஸ்ட் அபேட்சகர்களை—1வது வார்டு தோழர்,உ. மாலடோவ், 2வது வார்டு ஜான மதுரநாயகம், 11வது வார்டு எஸ். உலகநாதன், 17வது வார்டு, கே. கருப்பையா, 22 வது வார்டு, சி. வீராசாமி, பொதுத் தொகுதி, அருளானந்தம், ரிசர்வ் தொகுதி 24 வது வார்டு, கே. கருப்பையா அறிமுகப்படுத்தினர். தோழர் உலகநாதனும் தேர்தல் பற்றி பேசினர். (ந-நி.)

தொழிலாளர் தலைவர் முருகேசனுக்கு மீண்டும் வேலை

டிராம்வே தொழிலாளர் வெற்றி

சென்னை, செப்.12— சென்னை தொழில் கோர்ட் நீதிபதி திரு. எஸ். நரசிம்மலு சென்னை மின்சார டிராம்வே கம்பெனி 5-7-49ல் பிட்டரான தொழிற்சங்க ஊழியர் தோழர் வி. முருகேசனை வேலையை விட்டு நீக்கியது அநியாயம்; ஆகவே அவரை நிர்வாகம் மீண்டும் வேலைக்கு எடுத்துக் கொள்ள வேண்டு மென்று 8-8-52ல் திர்ப்பளித்துள்ளார்.

தோழர் எஸ். மோஹன் குமாரமங்கலம் (வ[illegible] சென்னை டிராம்[illegible] ளர்கள் சார்பில் [illegible]

[illegible] முன்னால் கொ[illegible] முன்பு விசாரிக்[illegible]டும். தொழில[illegible]க்கு தனக்கு எதிரான [illegible]சியத்தைக் கேட்க உரிமையும், சாட்சிகளைத் குறுக்கு விசாரணை செய்ய [illegible]னுமதியும், தன் சார்பில் [illegible]ங்க தாடவும், சாட்சிகளை விடவு[illegible] அதிகாரம் உண்டு என்று கம்பெனியின் நிரந்தர உத்தரவு நிர் 23 தெளிவாக கூறுகிறது. மேலும் டிஸ்மிஸ் அல்லது டிஸ்சார்ஜ் செய்யப்பட்ட தொழிலாளி இலாகா நிர்வாகி மூலமாக, நிர்வாகத்திற்கு அப்பீல் செய்ய அனுமதியை அது அளிக்கிறது. ஆனல் தொழிலாளர் அதிகாரியின் சாட்சியத்திலிருந்[illegible] முருகேசனைப் [illegible]

தக் காரணத்திற்காகத்தான் நடவடிக்கை எடுத்திருக்கிறார்கள் என்று தெரிகிறது", என்று கூறியுள்ளார்.

கடைசியாக நீதிபதி, கம்பெனியார் தோழர் முருகேசனுக்கு வேலை கொடுக்க வேண்டுமென்று, 16-6-52 (அதாவது வழக்கு நீதி மன்றத்திற்கு விடப்பட்ட தினம்) யிருந்து அவருக்கு சம்பளம் கொடுக்க வேண்டுமென்றும், 5-7-49—16-6-52 வரை டிஸ்மிஸ் செய்யப்பட்டு இருந்த காலத்திற்கு நஷ்டஈடு [illegible]

[illegible]லை மகாநாட்டிற்கு [illegible]களை தெரிந்துகொள்ள

[illegible] ஐ. டி. களின் முயற்சிகள்!

பரமக்குடியில் மோப்பம்பிடிக்கும் வேலைகள்

பரமக்குடி, செப், 12— பரமக்குடியிலிருந்து 40-க்கு மேற்பட்டவர்கள், 12, 13. 14 தேதிகளில் நடைபெறும் பொன்மலை மகாநாட்டிற்கு. நேற்றிரவு புறப்பட்டுச் சென்றனர்.

இவர்கள் யார் யார் என்பதை அறிய இங்குள்ள சி. ஐ. டி, ஒருவர் விசாரித்துக் கொண்டே (மோப்பம் பிடித்துக் கொண்டே) திரிகிறார்.

பல இடங்களில், வேண்டுமென்றே போய் விசாரிப்பது போல், பாவனை செய்து கொண்டு, "இம்மகாநாட்டிற்கு போகிறவர்களைப் ப[illegible]யெல்லாம் குறிப்பு எடுத்[illegible]வத்துக் கொள்கிறோம்[illegible]றும், "இவர்களை [illegible]ம்யூனிஸ்டுகள்" [illegible]

யாரும் போய் சேர விடாமலோ, மற்ற முற்போக்கு கட்சிகளுக்கு ஆதரவுகள் அளிக்காமலோ, இருக்கும்படி பொது மக்களை சி. ஐ. டி.கள் கண்காணித்து வருவதாக எண்ணிக் கொள்கிறார்கள்.

ஆச்சாரியார் ஆட்சியில் மக்களை இது போன்று பயமுறுத்தல் செய்வதின மூலம் ஆள நினைக்கும் புத்தியை மாற்றிக் கொள்ள வேண்டுமென்று மக்கள் கருதுகிறார்கள். (ந-நி.)

கூட்டுறவு சங்க நிர்வாகிகள் தேர்தல்

[illegible]ளிங்கபுரம், செப். 13— [illegible]ர் ஜில்லா வங்கனூ[illegible] லட்சுமிநார[illegible]ண நெச[illegible]திற்கு [illegible] [illegible]வரா[illegible] [illegible]முதலி[illegible]ளாகவும் [illegible]தியன்று ஏக[illegible]தெடுக்கப்பட்[illegible]

[illegible]ணம்

[illegible]14— [illegible]

வானெலி

செப். 16—செவ்வாய்

சென்னை (41·32மீ)

காலை

7-00	ஸ்வாகதம்
7-15	தமிழில் செய்தி
7-30	எஸ்.வி. கிருஷ்ணமூர்த்தி --பாட்டு
8-00	ஆங்கிலத்தில் செய்தி

பகல்

12-30	நடுத்தரபள்ளிகளுக்கு
1-00	மாதர்களுக்கு
1-30	கீதமஞ்சரி
1-40	ஹிந்தியில் செய்தி
1-50	கதம்பம்
2-00	தமிழில் செய்தி
2-10	ஸாரங்கி
2-15	உயர்நிலை பள்ளிகளுக்கு

மாலை

4-00	ஆரம்பப்பள்ளிகளுக்கு
4-30	ஐரோப்பிய சங்கீதம்
5-30	கமலா நாகநாதன் --வயலின்
6-00	ஆங்கிலத்தில் செய்தி
6-10	அறிவிப்புகள்
6-20	டி ஹாலாசியம்-பாட்டு
7-00	திருக்குறள் பாடல்கள்
7-30	பேசும் தமிழ்
7-45	திருச்சியிலுள்ளபடி
9-00	ஆங்கிலத்தில் செய்தி
9-15	ஹிந்திப்பாடம்
10-00	வாத்ய இசை

★

திருச்சி (389·6மீ)

காலை

7-10	கீதாரம்பம்
7-15	தமிழில் செய்தி
7-30	எஸ். ஸ்ரீமதி--பாட்டு
8-00	ஆங்கிலத்தில் செய்தி
8-15	சித்ரகானம்

பகல்

12-30	நடுத்தரபள்ளிகளுக்கு
1-00	இசைவேளை
1-40	ஹிந்தியில் செய்தி
1-50	கதம்பம்
2-00	தமிழில் செய்தி
2-10	எலக்ட்ரிக் சீதார்
2-15	உயர்தரப் பள்ளிகளுக்கு

மாலை

4-00	ஆரம்பப்பள்ளிகளுக்கு
5-30	பி. பிரஹதீஸ்வரன் --நாதஸ்வரம்
5-45	இசைப் பயிற்சி
6-05	அறிவிப்புகள்
6-10	எஸ். ஸ்ரீமதி--பாட்டு
6-30	கிராம நிகழ்ச்சிகள்
7-15	தமிழில் செய்தி
7-30	திரைகானம்
7-45	சித்தூர் சுப்ரமண்யம் பிள்ளை--பாட்டு
9-00	ஆங்கிலத்தில் செய்தி
9-15	பி. பிரஹதீஸ்வரன் --நாகஸ்வரம்

விவசாயிகளின் அவசியத் தேவைகளை வழங்குக!

கோவை, செப். 9— 6-9-52 மாலை 8 மணிக்கு கோவைக்கு அடுத்த கைக்கோளபாளையத்தில் தோழர் கே. ரமணி செங்கொடி ஏற்றி வைத்துப் பேசுகையில் தற்போது நாட்டில், அரிசி விலைகள், துணி விலைகள் ஏறியிருப்பதற்கும் இன்று உள்ள சர்க்கார், விவசாயிகளுக்கு எந்த வித உதவியும் செய்யாமல் உற்பத்தியை பெருக்கும்படி கூறினல் மாத்திரம் விவசாயிகள் உற்பத்தியைப் பெருக்கி விட முடியாது என்றார். நடைமுறையில் விவசாயிகளுக்கு தடங்கல் இல்லாமல் கரண்ட் சப்ளை செய்வதுடன், விவசாயிகளுக்கான உழுகருவிகள், உரம், கிணறுகள் பழுது பார்க்க சர்க்கார் நீண்ட தவணையில் கடன் உதவி செய்ய வேண்டுமென்றார்.

அடுத்தபடியாகப் பேசிய தோழர் எஸ். கிருஷ்ணன் பேசுகையில் இன்று விவசா[illegible]களுக்கு ஏற்பட்டிருக்கும் நெருக்கடிகள் தீர விவசா[illegible]கள் சங்கம் ஏற்படுத்[illegible] கிளர்ச்சி செய்யவேண்டு[illegible]றும், தஞ்சாவூரில் கொ[illegible] வந்த அவசரச் சட்ட[illegible] மாகாணம் பூராவும் [illegible] வரவேண்டு மென்று[illegible]னர்.

கூட்டத்தில் சுமார் [illegible] விவசாயிகள் கலந்து[illegible]டார்கள். அன்று [illegible] விவசாயிகளால் ஒ[illegible] நிகழ்ச்சியும் நடத்தி[illegible]ப்பட்டது.

Edited, Printed & Published by G. Alavandar, at Janasakti Press, Subodhaya Buildings, [illegible], Mount Rd, Madras 6.